DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Joy H. Selvanayagam

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703


Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1278
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 2, 2020



# உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்தது

உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்தை (ஒரு மில்லியன்) கடந்துள்ளது என நேற்று முன்தினம் வெளியான செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி 3 கோடியே 35 லட்சத்து 41 ஆயிரத்து 722 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கோரோனா வைரஸ் பரவியவர்களில் 76 லட்சத்து 67 ஆயிரத்து 24 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 65 ஆயிரத்து 375 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. உலகெங்கும் கொரோனாவில் இருந்து 2 கோடியே 48 லட்சத்துக்கும் அதிகமானோர் சிகிச்சைக்கு பின் குணமடைந்துள்ளனர். ஆனாலும் உலகம் முழுவதும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 10 லட்சத்து 6 ஆயிரத்து 74 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது கவலை தரும் செய்தியாகும். *(உள்ளே விபரமான கட்டுரையைப் படிக்கவும்)*

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com

# ரொரன்ரோவில் முற்றான முடக்கத்தை தவிர்க்கும் வகையில் புதிய கட்டுப்பாடுகளை அமுல்நடத்த ஒன்றாரியோ மாகாண அரசிடம் கோரிக்கை



ரொரன்ரோ மாநகரில் கோவிட்-19 தொடர்பாக புதிய கட்டுப்பாடுகளை அமுல் செய்தவதன் மூலம் ரொரன்ரோ நகரத்திலும் அதற்கு மேலாக ஒன்றாரியோ மாகாணத்திலும் அதிக உயிரிழப்புக்களையும் முற்றான ஒரு முடக்கத்தை ஏற்படுத்துவதிலிருந்தும் நாம் தவிர்த்துக் கொள்ளலாம் என்று ரொரன்ரோ மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் ஒன்றாரியோ மாகாண அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அறியப்படுகின்றது.

இது தொடர்பாக ரொரன்ரோ மாநகரச மருத்துவச் சபையின் தலைவர் ஜோ கிறஸ்சி நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள செய்தியில் 'ரொரன்ரொ மாநகர எல்லைக்குள் அதிகரித்து வரும் கோவிட்-19 தொற்றியவர்களின் எண்ணிக்கை எமக்கு அச்சத்தை ஊட்டுகின்றது. மேலும், சமூக மட்டத்திலும் வேலைத்தளங்கள், மற்றும் மக்கள் நடமாடும் இடங்களிலும் நோயின் பரவல் அதிகரித்துள்ளதை சுகாதாரத் திணைக்களம் கண்டறிந்துள்ளது. எனவே இந்த உடன் நடவடிக்கை மிகவும் அவசியம் என்றும் ரோரன்ரோ சுகாதார சபையின் தலைவர் அறிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தனது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:- எமது திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் செய்த ஆய்வுகளின் படி, இவ்வாறான கட்டுப்பாடுகளை உடனடியாக அமுல் செய்யாதுவிடின், தற்போது பாடசாலைகள் இயங்கத்தொடங்கி அங்கு மாணவர்கள் சமூகமளித்து வருகின்ற காரணத்தால்? பொது மக்களின் கவயீனத்தால் நோய் பரவல் அதிகரித்து அவர்களும் பாதிக்கப்படுகின்ற அதேவேளை, பாடசாலைகளுக்கு மிகுந்த ஆர்வத்துடன் சென்று வரும் மாணவர்கள் கூட பாதிக்க நேரிடும். இந்த தருணமானது மிகுந்த ஆபத்துக்கள் நிறைந்த ஒன்று என்றே நாங்கள் கருதுகின்றோம்.

தற்போதைய கோவிட்-19 பரிசோதனைகளில், சராசரியாக தினசரி 265 தொற்றாளர்கள் கண்டறியப்படுகின்றார்கள். இந்த எண்ணிக்கையில் ஏற்படும் கணிசமான உயர்ச்சி என்பது நாங்கள் அசட்டை செய்யக்கூடிய ஒன்றல்ல.



கடந்த யூலை மாதத்தில் கோவிட்-19 தாக்கத்திலிருநது சற்று விடுபட்டு 3ம் கட்ட மீளத்திறக்கும் நிலைக்கு வந்தோம், ஆனால் தற்போது மீண்டும் 2ம் கட்டத்திற்கு சென்றுவிடுவோமான என்கின்ற அச்சம் தோன்றியுள்ளது. இங்கு குறிப்பிடக்கூடிய ஒன்று எதுவென்றால், கடந்த இரண்டு மாதங்களில் மிகவும் மோசமான தொற்றாளர் எண்ணிக்கையை நாம் கண்டறிந்துள்ளோம். தொடர்ச்சியாக, ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் பாதிப்பின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் தற்போது எண்ணிக்கை அதிகரிப்பு இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. 133 தொற்றாளர்கள் என்றிருந்த நிலை மாறி தற்போது 265 ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று முழுதாக ஒன்றாரியோ மாகாணத்தைக் கவனித்தால் தொற்றாளர்களின் எண்ணிக்கை 600 ஆக தினசரி காணப்படுகின்றது தற்போது ஆரம்பித்துள்ள ஒக்டோபர் மாதத்திலும் நிலைமை மோசமாகவே இருக்கும் என்று நாம் கருதுகின்றோம். எனவே மாகாண அரசும் ரொரன்ரொ மாநகர சபையும் இணைந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் வேண்டிக்கொள்கின்றோம்'' என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மேற்படி விடயம் தொடர்பாக ரொரன்ரோ மாநகர சபையின் முதல்வர் திரு ஜோன் ரோரி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த கோவிட்-19 நோய்த் தொற்று அதிகரிக்கும் விதமான எமக்கு ஒரு அபாய அறிவிப்பை தருவதைப் போன்றதாகும். எண்ணிக்கை நாம் அஞ்சுகின்ற அளவிற்கு உயர்ந்து கொண்டு போவதை எமது மாநகரசபையின் சுதாதாரப் பிரிவினர் உடனடியாக கவனிக்க வேண்டும் என்று அறிவித்துள்ளேன். இது தொடர்பாக ரொரென்ரோ மாநகர சபையின் முதன்மை சுகாதார அதிகாரி ஈலின் டி வில்லாவிடம் நான் விடுத்துள்ள வேண்டுகோளின் படி, ரொரன்ரோ மாநகர எல்லைக்குள் வெளியிடங்களிலிந்து வருவோரால் நோய்த் தொற்று பரவுகின்றதா என்பதை அவரது திணைக்கள அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்றும் நான் அறிவுறுத்தியுள்ளேன்'' என்றார்

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

# MORTGAGE SOLUTIONS

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.298.2777

$375 Mo.

www.mortgageSolutions.ca

MONTHLY SAVING $2,478

SAVE UPTO 75% REFINANCE



KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent Lic# M12002440
Ultimate Mortgage Group Lic 11995
info@mortgageSolutions.ca
Off: 416.298.2777
Dir: 416.894.9122

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.39% | | $1,563.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,563.00 |

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# மக்கள் கொரோனாவை மறந்த நிலையில் இருந்தாலும் திறந்த கொள்கையோடு செயற்படும் கனடிய அரசும் மாகாணங்களும்

கொரோனா தொற்றும் ஆரம்பமான மாதங்களில் மிகவும் கவனத்துடன் நடந்துகொண்ட உலகின் மக்களில் பெரும்பாலானவர்கள் தங்களை நோக்கி வந்த பேராபத்து கட்டத்தை தவிர்த்துக் கொண்டனர் ஆனால் அதே மக்கள் தற்போது கொரோனா வைரஸ் தொற்று ஆபத்தை முற்றாக மறந்த நிலையிலேயே செயற்படத் தொடங்கியுள்ளதாக மருத்துவ நிபுணர்கள் பலர் கவலை தெரிவிக்கின்றனர். இவ்வாறான அலட்சியப் போக்கு தொடருவது ஆரோக்கியமானதல்ல எனவும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆனால் கனடாவிலும் கொரோனா தொற்றை மறந்த நிலையில் மக்களில் பெருந்தொகையானோர் செயற்பட்டாலும், எமது கனடிய அரசும் மாகாணங்களும் திறந்த கொள்கையோடு செயற்படுகின்றன என்றே கூறலாம். முக்கியமாக கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ மற்றும் அவரது அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மிகவும் பொறுப்புணர்வுடன் தமது நாட்டு மக்களுக்கு சேவையாற்றி வருகின்றனர் என்பதை இங்கு குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக கோவிட்-19 கிருமி தொற்று ஆரம்பித்தவுடனேயே, கனடாவில் உள்ள மூன்று முக்கியமான பல்கலைக் கழகங்களின் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கு தலா ஒரு மில்லியன் டாலர்களை அனுப்பிவைத்து உடனேயே கோவிட்-19 வைரஸ் தொடர்பான ஆராய்ச்சிகளை ஆரம்பித்து தகுந்த தடுப்பு மருந்தைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று உற்சாகம் அளித்தவர்கள் எமது பிரதமர் என்றால் அது மிகையாகாது.

இது போலவே ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் அவர்கள் தனது அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளோடு இணைந்து தகுந்த நடவடிக்கைகளை தினமும் எடுத்த வண்ணம் உள்ளார். குறிப்பாக மருத்துவ ஏற்பாடுகள் மற்றும் பாடசாலைகளை மீண்டும் திறந்த விடயம் ஆகியன பாராட்டுக்குரியவை.

எத்தனையோ கேள்விகள் மற்றும் விமர்சனங்கள் இருந்தாலும் கனடாவின் பிரதமர் மற்றும் அமைச்சர் அத்துடன் ஒன்றாரியோ, கியுபெக் மாகாணங்களின் முதல்வர்கள், இவர்களைப் போன்ற ஏனைய சில மாகாணங்களின் முதல்வர்கள் அனைவரும் தங்கள் மாகாணங்களுக்குப் பொறுப்பான தலைமை மருத்துவ அதிகாரிகளோடு இணைந்து தேவையான நிதி ஒதுக்கீடுகளைச் செய்தும் தகுந்த நேரத்தில் சிறப்பான பணியை ஆற்றியமைக்கு தகுந்த சாட்சிகளாக, பல்லின ஊடகங்களான நாமே சாட்சிகளாக உள்ளோம்.

கியுபெக் மாகாண முதல்வர் மற்றும் அவரது சுகாதார அமைச்சர் ஆகியோரின் சேவையும் பாராட்டுக்களுக்கு உரியவை. ஆரம்பத்தில் அந்த மாகாணத்தில் இறப்புக்களின் விகிதம் அதிகமாக இருந்தபோதும் சற்றும் பதற்றமடையாமல் தனது அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளோடு இணைந்து தகுந்த சேவைகளை வழங்கியவர் கியுபெக் மாகாண முதலமைச்சர் என்றே நாம் கூறவேண்டும்.

கொரோனா தொற்று பாதுகாப்பு விடயத்தில் உலக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு படிப்படியாகக் குறைவடைந்து கொண்டு செல்வதாக சமீப நாட்களாக பரவலாக குற்றச்சாட்டுகள் வெளிவருகின்றன. எமது மக்களில் பலர் கொரோனா விடயத்தில் இப்போது அலட்சியமாக நடந்து கொள்கின்றனர்.

குறிப்பாக இலங்கையில் மக்கள் மத்தியில் மாத்திரமன்றி, அரசாங்க மற்றும் தனியார் அலுவலகங்கள் பலவற்றிலும் கூட தற்போது இவ்விதமான அலட்சியத்தையே அவதானிக்க முடிகின்றது. அலுவலகக் கட்டடங்களுக்குள் பிரவேசிக்கின்ற போது கைகளை சவர்க்காரமிட்டுக் கழுவுதல் நடைமுறையை பல இடங்களில் தற்போது காண முடிவதில்லை. பொதுமக்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணுகின்ற நிதி நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் அலுவலகங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களில் பலரும் இப்போதெல்லாம் முகக் கவசத்தை முற்றாக மறந்த நிலையிலேயே காணப்படுகின்றனர் என்பது எமக்கு அங்கிருந்து கிடைக்கும் தகவலாகும் அங்கு இந்த நோயினால் மரணித்தவர்களின் எண்ணிக்கையை மிகவும் குறைத்து வெளியிடுவதில் அரசாங்கம் கவனமாகச் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு இருப்பதால் மக்களும் இவ்வாறு நடந்து கொள்கின்றார்கள் என்றும் நாம் எண்ணக் கூடியதாக உள்ளது.

கனடாவில் நாம் நடமாடும் இடங்களில் , முகக்கவசத்தை எம்மில் பலர் வெறுமனே சம்பிரதாயத்துக்காகவே அணிந்து கொள்வதையும் காண முடிகின்றது. மூக்கும், வாயும் மூடப்படாத நிலையில் முகக்கவசத்தை தாடை வரை கீழறக்கிய நிலையில் வீதியில் மக்கள் நடமாடுவதை தாராளமாகவே காண முடிகின்றது.

கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவரிடமிருந்து ஏனையோருக்கு நோய்க் கிருமிகள் பரவுவதை முகக்கவசம் பெருமளவில் தடுக்கிறது என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். அதேசமயம் நோயாளி ஒருவரின் தும்மல், இருமல் போன்றவற்றால் காற்றில் விசிறப்படுகின்ற கொரோனா வைரஸ் கிருமிகள் சுகதேகி ஒருவரின் உடலினுள் பிரவேசிப்பதை முகக்கவசத்தினால் ஓரளவு தடுக்க முடியுமென்பதும் மருத்துவ நிபுணர்களின் கருத்தாக இருக்கின்றது.

எனவே எமது அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் எடுத்துவரும் ஒத்துழைப்பு வழங்கி இந்த கொரோனா என்னும் கொடிய நோயிலிருந்து எம்மையும் எமது நாட்டு மக்களையும் காப்பாற்றுவோம் என்று ஒவ்வொருவரும் 'சபதம்' எடுத்துக்கொள்ள வேண்டும்.

**GHURUS TOWING**

Forklift / Machinery move
Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap up to $1000



**NIRMALAN (ROGER):**
(416) 990-7777
(416) 984-7777

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN:**
(416) 894-6244

**JOBS AVAILABLE**

Jobs Available
in the GTA immediately.

Postitions Available:
- General Labour / Assembler
- Millwright / Machine Operator
- Glaziers / Electrician

Team Global Employment Agency

Call: (416) 514-0733
Email: resume@teamglobal.ca

**ROOM for RENT**

McCowan / Eglinton
(43 Blue Lagoon Crt., Scar, ON, M1J 3M3)
சந்திப்பிற்கு அருகில்
1 bedroom in a detached house
with parking spot வாடகைக்கு உண்டு.
Close to GO Train, NoFrills, Walmart, & many convient stores.

Rent: $650 (Utilities included)TTC,
Available from October 1st, 2020
பெண்கள் மட்டும்.

Call: 437-235-6130

**BASEMENT வாடகைக்கு உண்டு**

Birchmount / Eglinton
சந்திப்பிற்கு அருகில்
2 bedroom basement with separate entrance
மற்றும் எல்லாவித வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.
Close to TTC, subway, & shopping.
குடும்பம் விரும்பத்தக்கது.

Call: (416) 821-2181

**GENERAL HELPERS NEEDED**

Renovation வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.
Full Time / Part Time available.
Call:
416-706-8160

## Canadian MP Ruby Sahota Re-Elected Chair of PROC

# கனடிய பாராளுமன்ற நடைமுறைகள் விவகாரங்கள் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் ரூபி சகோடா மீண்டும் தெரிவானார்



கனடாவில் பிரம்ரன் வடக்குத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ரூபி சகோடா அவர்கள், கனடிய பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் அதன் நடைமுறைகள் ஆகியவற்றுக்கு பொறுப்பான குழுவின் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் மேற்படி பிரம்ரன் வடக்குத் தொகுதியின் சிறந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி முக்கியமாக ஒரு குழுவின் தலைவர் என்ற வகையில் பாராளுமன்ற உறுப்பினர் ரூபி சகோடா அவர்கள், பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் கனடாவின் தொகுதிகள் தொடர்பான விடயங்கள், கனடிய தேர்தல் திணைக்களத்தின் விவகாரங்கள் மற்றும் பாராளுமன்றத்தின் மக்கள் அவையின் குழுக்கள் தொடர்பான நியதிகள் ஆகியவற்றும் பொறுப்பாக செயற்படுவார்.

இந்த நியமனம் தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரம்ரன் வடக்குத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ரூபி சகோடா அவர்கள், "இவ்வாறான குழுக்கள் தான் கனடாவின் பாராளுமன்ற ஜனநாயகம் போன்றவற்றை பேணிப் பாதுகாக்கும் முக்கிய சபைகள் ஆகும். கனடாவின் பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களோடும் இணைந்து நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முயல்வேன்" என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

பிரம்ரன் வடக்குத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ரூபி சகோடா அவர்கள்,

இதற்கு முன்னரும் பல முக்கிய குழுக்களில் பொறுப்பான பதவிகளை வகித்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவரை வாழ்த்த விரும்புவோர் 905-840-0505 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

# திலீபன் நினைவு நாள்– செய்தியாளர்கள் தடுக்கப்பட்டு பொதுமக்கள் அச்சுறுத்தப்பட்டனர்

- சிவா பரமேஸ்வரன் - மூத்த செய்தியாளர்

இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதி காக்கும் படைகள் விலக வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்து உயிரிழந்த "தியாக தீபம்" திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் செய்தியாளர்களையும் பொதுமக்களையும் இலங்கை காவல்துறை மற்றும் புலனாய்வு அமைப்பினர் அச்சுறுத்தியுள்ளனர்.

திலீபனின் நினைவு நாளை அனுசரிக்க அரசால் பல கெடுபிடிகள் விதிக்கப்பட்டிருந்தது. கடந்த சில ஆண்டுகளாகச் சிக்கலின்றி அவரது நினைவு நாளை வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அனுசரித்தனர். ஆனால் இவ்வாண்டு மீண்டும் அதற்கு அரசால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அரசின் தடையையும் மீறி முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் இணைந்து ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவிலில் கூட்டு உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனர்.



இந்த உண்ணாவிரதத்தில் பங்குபெற்ற பொதுமக்களையும் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் இலங்கை காவல்துறை மற்றும் புலனாய்வுப் பிரிவினர் படம் பிடிக்கத் தொடங்கியதும் பிரச்சினை எழுந்தது.

புலனாய்வுப் பிரிவினரிடம் செய்தியாளர்கள் பேச விழைந்த போது அவர்கள் மக்களைப் படம் பிடித்தது மற்றும் அந்தச் செய்தியாளர்களைப் படம் பிடிக்க விடாமல் தடுத்து அச்சுறுத்தியது ஆகியவற்றைக் காட்டும் கானொளி இப்போது வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உண்ணாவிரதம் குறித்த செய்திகளை தமது மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்கவே இந்த வீடியோவை தாங்கள் எடுத்ததாக இலங்கை காவல்துறை கூறுகிறது. ஆனால் இந்த வீடியோ மூலம் தங்களை அடையாளம் கண்டு நினைவேந்தல் நிகழ்வுக்குப் பிறகு தம்மை அச்சுறுத்தவே பதிவு செய்யப்பட்டது என்று அதில் பங்குபெற்ற சிலர் கூறுகின்றனர்.

அமைதியான முறையில் கோவில் ஒன்றில் கூடி உண்ணா விரதம் இருந்த தங்களை பொலிசாரும் புலனாய்வுத் துறையும் படம் பிடித்தது தங்களுக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியது என்று அங்கிருந்த பொதுமக்கள் சிலர் கூறினர். அந்த நிகழ்வில் பங்குபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜாவும் காவல்துறையின் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பும் கண்டனமும் வெளியிட்டுள்ளார்.



நீத்தாரை நினைவு கூர்வது தமிழர் பண்பாடு மற்றும் மரபு என்று ஒட்டுசுட்டான் சிவன் கோவிலில் கூடியிருந்த செய்தியாளர்களும் பொதுமக்களும் பொலிசாரிடம் விளக்கியும் அவர்கள் செவிமடுக்கவில்லை என்று அங்கிருந்த செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஊடகச் சுதந்திரம் முழுமையாக உள்ளது என்று அரசு கூறும் வேளையில், நினைவு நாள் ஒன்றில் பங்கேற்ற மக்கள் செய்தியாளர்களிடம் பேசுவதை காவல்துறையினர் ஏன் படம்பிடிக்க வேண்டும்? எனும் கேள்வியை இச்சம்பவம் எழுப்பியுள்ளது.

காவல்துறையினரும் புலனாய்வுப் பிரிவினரும் பதிவு செய்த வீடி-யோ தங்களையும் அங்கு குழுமியிருந்த மக்களையும் மிகுந்த அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது என்று வடக்கு மாகாண செய்தியாளர் சண்முகம் தவசீலன் கவலை வெளியிட்டுள்ளனர்.

"பொதுமக்களின் கருத்துக்களை நாங்கள் எமது நிறுவனத்தின் இலச்சினையுடன் கூடிய மைக்கில் பதிவு செய்யும் போது அதைக் காவல்துறையினர் படம் படிப்பது முறையானது அல்ல" எனினும் அங்கு கூடிய சிலர் கோவில் பகுதியிலிருந்து வெளியேறி பொலிசாரின் கண்ணில் படாமல் சில செய்தியாளர்களிடம் தங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர்.


இலங்கையில் அரசுக்கு எதிரான எந்தச் செயல்பாடும், கருத்தும் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்படும் என்பதற்கு இச்சம்பவம் ஒரு உதாரணம் என்று பலர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஊடகச் சுதந்திரம் இலங்கையில் ஏட்டளவில் மட்டுமே உள்ளது என்று நீண்ட காலமாகப் பன்னாட்டு அமைப்புகளும், எல்லையில்லா ஊடகவியலாளர்கள் அமைப்பும் குற்றஞ்சாட்டி வருகின்றன.



இலங்கை செய்திகள்

# யாழ்ப்பாணத்தில் நீர்வேலி சந்திக்கு அண்மையில் வாள்வெட்டு!
## தாய் - மகன் படுகாயம்





யாழ்ப்பாணம் - நீர்வேலி சந்திக்கு அண்மையில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் இளைஞன் மீது சராமாரியாக வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது. அத்தோடு, மகனைக் காப்பாற்ற முற்பட்ட தாயார் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வன்முறைச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பு.சிவா (வயது-30) அவரது தாயார் ரேணுகா (வயது-50) ஆகிய இருவர் மீதே இவ்வாறு வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் அடங்கிய கும்பலே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

வன்முறைக் கும்பல் வாள்கள், கம்பிகள் கொண்டே தாக்குதலை நடத்தியுள்ளது. மேலும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருற்களை அடித்துச் சேதப்படுத்தியும் தீயிட்டு எரித்த வன்முறைக் கும்பல், அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது. இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் விரைவில் இடம்பெறவுள்ள சந்திப்பு



இலங்கையில் இயங்கிவரும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அனைத்து தலைவர்களையும் பங்கேற்கச் செய்வதற்கான விசேட கூட்டம் ஒன்றை மிக விரைவில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் விவகாரத்தை அடுத்து தற்காலிகமாக ஒன்று சேர்ந்துள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள், தமது அடுத்த கட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று (புதன்கிழமை) தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கூடி ஆராய்ந்தன.

யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போதே இந்த தீர்மானம் எட்டபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தியாக தீபம் திலீபனின் நினைவு நிகழ்வுக்கு அரசு பல்வேறு தடைகளை விதித்தது. இதன் காரணமாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள 10 கட்சிகள் இணைந்து அதனை எதிர்க்கத் தீர்மானித்தன.

இவ்வாறு இணைந்த கட்சிகள் ஒன்றிணைந்து அண்மையில் கதவடைப்புப் போராட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக்கு எதிராக போர்க்கொடி மணிவண்ணன்



தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனநாயக பண்பற்ற கட்சியாக மாறிவிட கூடாது என்பதற்காக தான் தொடர்ந்து கட்சிக்குள் இருந்து போராடப் போவதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடக பேச்சாளர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், கட்சிக்குள் நடக்கும் ஜனநாயக மீறலை பார்த்துக்கொண்டு இருப்பவன், தமிழர்களுக்கு எதிரான ஜனநாயக மீறலை எதிர்க்க தகுதியற்றவன் என்றும் கூறினார்.

நாம் எமது கொள்கை சார்ந்து பயணிக்கும் போது, ஒரு சிலரின் சுயநலம் மற்றும் சுயலாபத்திற்காக திசை திருப்ப முற்பட்டபோது அதனை கட்சிக்குள் இருந்து தான் கடுமையாக எதிர்த்தாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர்களின் சுயலாப நோக்கிற்கு தான் முட்டுக்கட்டையாக இருந்தமையினாலேயே தன்னை கட்சியை விட்டு நீக்க பல முயற்சிகளை மேற்கொள்ள தொடங்கினார்கள் என்றும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக்கு என நிதிக்கட்டமைப்பை உருவாக்க முயற்சித்த போதும் அது ஒரு சிலருக்கு பிடிக்கவில்லை என்றும் நிதிக்கட்டமைப்பை உருவாக்க நினைத்த தன்னை கடுமையாக எதிர்த்தார்கள் என்றும் கூறி-னார். இன்று தன்னை கொள்கை இல்லாதவன் என கூறுபவர்கள் ஏன் முதலிலேயே கட்சியில் இருந்து துரத்தவில்லை என்றும் ஏன் தேர்தலில் போட்டியிட வேண்டும் என மன்றாடினார்கள் என்றும் கேள்வியெழுப்பினார்.

தமிழ் தேசிய கட்சிகளின் உடை சிங்கள தேசிய கட்சி வடக்கு கிழக்கில் எழுச்சி பெற்று வருகின்ற நிலையில் புதிய கட்சியோ, அமைப்போ உருவாக்குவது பெரிய விடயமே இல்லை என குறிப்பிட்ட சட்டத்தரணி வி.மணிவண்ணன் தான் உருவாக்கிய கட்சி கண் முன்னால் அழிவடைந்து செல்வத பார்த்துக்கொண்டு இருக்கப்போவதில்லை என்றும் கூறினார்.

கட்சிக்குள் ஜனநாயக பண்பற்ற செயற்பாடுகள் தொடர அனுமதித்தால் தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிக்கு எதிராக போராட தகுதியற்றவனாக இருப்பேன் என்றும் எனவே மிக விரைவில் கட்சியின் பொதுச்சபையை கூட்டி முடிவெடுப்போம் என்றும் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம்!



- ஜெ. டிஷாந்த்

சர்வதேச சிறுவர் தினமான இன்று, காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக, இன்று காலை, வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பினரால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பேருந்து நிலையத்தில் இருந்து பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு காரியாலயத்திற்கு முன்பாக போராட்டத்தை நிறைவு செய்துள்ளனர்.

இதன்போது காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி வேண்டியும், சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் உள்ளிட்டவற்றை கண்டித்தும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட உறவுகளுடன் கொண்டு செல்லப்பட்ட எமது சிறுவர்கள் எங்கே, இராணுவத்தினராலும், துணை இராணுவ குழுக்களினாலும் கொண்டு செல்லப்பட்ட எமது சிறுவர்கள் எங்கே என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது கோசமெழுப்பினர்.



இதேநேரம், இனவழிப்பு குற்றங்களுக்கு உள்ளக விசாரணையை நிராகரிப்பதாகவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

# கை துண்டிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டவருக்கு அதனைப் பொருத்தி யாழ். மருத்துவர்கள் சாதனை!!



யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரு கை துண்டிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டவருக்கு, அதனை பொருத்தி வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிளாஸ்டி சத்திரசிகிச்சையை, ஒருவர்க்கு மேற்கொண்ட விதம் தொடர்பாக ஊடகங்களுக்கு இன்று, (புதன்கிழமை) கருத்து தெரிவிக்கும் போதே த.சத்தியமூர்த்தி இதனை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, “வட.மாகாணத்தில் முதல்முறையாக ஒரு கை துண்டாடப்பட்ட நிலையில், கடந்த 23ஆம் திகதியன்று, யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட நபருக்கு தற்போது முழுமையான சிகிச்சைகள் அழிக்கப்பட்டு, மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியர் இளஞ்செழியன் பல்லவன் தலைமையிலான குழுவினர், முழுமையான பங்களிப்பினை வழங்கியதற்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், பொதுமக்கள் கைகள், கால் துண்டாகுதல் தொடர்பாக விழிப்புணர்வு அடையவேண்டும். மேலும் அளவுக்கு மேலாக வாள்வெட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றாலும் இவ்வாறான சிகிச்சைகள் வழங்கமுடியாது போகக்கூடும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்

# காணாமலாக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி வேண்டும் என்கிறார்கள் அவர்களின் உறவினர்கள் சங்கம்


Association for Relatives of the Enforced Disappearances
NORTH&EAST PROVINCES
Kandy Road, Kilinochchi
Date 11.10.2020
https://drive.google.com/file/d/1DZoSpmQZFqnZJuSSerAJ5pgyCz_tigpJ/view
நன்றி!
Y.Kanagaranjini
President
Association for Relatives of the Enforced Disappearance
North & Eastern Province

E mail address-ared.kilinochchi@gmail.com

பன்னாட்டு சிறுவர் தினமான இன்று இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதிகிடைக்க வேண்டும் என வடக்கு கிழக்குவலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழு வடிவம் வருமாறு சிறிலங்கா அரசாங்கத்தால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் குழந்தைகள் இருக்குமிடம் அறிந்திட உங்கள் உதவி நாடி எழுதுகிறோம். உங்கள் வழிகாட்டலில் எங்கள் குழந்தைகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்று நம்பிக்கை கொண்டுள்ளோம்.

உலகிலேயே சிறிலங்கா அரசாங்கமே எட்டுமாதக் குழந்தைகளைக் கூட வலிந்து காணாமல் செய்த ஒரே நாடாகத் திகழ்கிறது. இந்தக் குழந்தைகள் அனைவரும் தமிழினக் குழந்தைகளே. எமது இந்தக் குழந்தைகளில் பலரும் பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு 2009 மே மாதம் போரின் முடிவில் எவ்விதக்கேடும் நேரிடாது என்ற உறுதிமொழிகளை நம்பி சிறிலங்கா படைகளிடம் பெற்றோர் தம் பிள்ளைகளோடு சரணடைந்த போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆவர். 11 ஆண்டு காலம் கழிந்த பிறகும் இந்தக் குழந்தைகளைப் பற்றியோ அவர் தம் பெற்றோர் பற்றியோ அரசினரிடமிருந்து பதிலேதும் இல்லை.

சில குழந்தைகள் சிறிலங்காப் படைகளால் பெற்றோர் சரணடைந்த போது உடன்சென்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆவர். இந்தக் குழந்தைகள் இவ்வாறு சரணடைந்து கடத்தப்பட்டதற்குக் கண்கண்ட சாட்சிகள் பலர் உள்ளனர். பல்லாண்டுக் காலமாய் இந்தக் குழந்தைகளின் உறவுகள் இந்தக் குழந்தைகளைத் தேடித் தவிக்கின்றார்கள். சிறிலங்காவில் மட்டுமின்றி, ஐ.நா. மனிதவுரிமைப் பேரவையிலும் கூட சிறிலங்காப் படைகளும் இராணுவ உளவுத்துறையும் செய்யும் கேடுகள் உட்பட எத்தனையோ தடைகள் இருப்பினும் இந்தத் தேடல் தொடர்கிறது. காணாமல் செய்யப்பட்ட எம் குழந்தைகள் பால் கவனம் ஈர்க்க வேண்டும் என்ற தவிப்பிலும் துடிப்பிலும், தொடர்ந்து அமைதிவழி போராட்டங்களும், உணவு மறுப்புப் போராட்டங்களும் செய்து வருகிறோம். ஜனாதிபதிக்கும் பிரதம மந்திரிக்கும் எத்தனையோ வேண்டுகோள்கள் விடுத்தும் கூட, சிறிலங்கா அரசாங்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இந்தத் தமிழ்க் குழந்தைகள் பற்றிய விவரங்கள் ஏதும் தர மறுத்து வருகிறது.

சிறிலங்காவின் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 2016 ஜனவரி 15ஆம் நாள் வடக்கு மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம் நகரில் ஒரு பொது நிகழ்வில், "2009 மே மாதத்தில் போர்முடிவில் சிறிலங்கா பாதுகாப்புப் படைகளிடம் சரணடைந்தவர்கள் இப்போது உயிரோடு இல்லை." என சொன்னார். எங்கள் குழந்தைகளும் உயிருடனில்லையோ என்று கவலைப்படுகிறோம். இவர்கள் இன்றிருந்தால் ஆகச் சிறு குழந்தைக்கு இப்போது கிட்டத்தட்ட பதினொரு வயதாகியிருக்க வேண்டும்.

ஐ.நா. மன்றத்தின் கட்டாயப்படுத்தப்படும் சட்டங்களின் (Enforced Act) விதப்புரைகளில் முக்கியமான ஒன்றாக கருதப்பட்டு இருக்கின்ற சிறுவர் பாதுகாப்பு தொடர்பான சரத்துக்களுக்கு முரணாக எமது குழந்தைகள் சிறிலங்கா அரச படைகளால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். ஐ.நா நெறிமுறைகளுக்கு அமைவாக இது ஒரு அப்பட்டமான, மனித குலத்திற்கெதிரான குற்றமாக பார்க்கப்படுவதால் ஐ.நா உயர்ஸ்தானிகரும், ஐ.நா. சபையும் எமது குழந்தைகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட விடையத்தில் நேரடியாக தலையிட்டு எமது குழந்தைகளை மட்டுமல்லாது இலங்கை அரசால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் அனைவரையும் மீட்டுத்தருமாறு மன்றாட்டமாக கேட்டுக்கொள்கின்றோம்.

இப்போது நாம் இந்த அரசை நோக்கி எமது குழந்தைகளை மீட்டுத்தரவேண்டியோ அல்லது எமது உறவுகளை மீட்டுத்தர வேண்டியோ அல்லது அடிப்படை உரிமைகளுக்கான அமைதி வழி ஒன்றுகூடலையோ செய்ய முடியாத அளவிற்கு இராணுவப்புலனாய்வாளர்களாலும், அரச படைகளாலும் புதிய உயிர் அச்சுறுத்தலகளுக்குள் ஆட்பட்டுள்ளோம். நாம் அரச விரோதிகள் என்றும் பயங்கரவாதிகளென்றும் அச்சுறுத்தப்படுகின்றோம். தொலைபேசி மூலமான மிரட்டல்களை அரசபுலனாய்வாளர்கள் மேற்கொள்கின்றனர். எமது அகிம்சைவழிப் போராட்டங்களுக்கு தடைகளை விதிப்பதும் உரிமைக்காக குரல் கொடுப்பவர்களை போலி புனைதல்கள் மூலம் வழக்கிட்டு கால வரையற்று சிறையிலடைக்கவும் கோத்தபாய அரசு முயற்சிக்கின்றது. இது ஐ.நா. சபையின் கட்டாயப்படுத்தப்படும் சட்டப்பிரிவுகளின் விதந்துரைகளின்படி சட்டத்திற்கு புறம்பானவிதத்தில் துன்புறுத்தல், பயமுறுத்தல் மற்றும் பழிவாங்குதல் என வரைவிலக்கணப்படுத்துகின்றது. எனவே இதற்காக எமக்கான பரிகாரம்தான் என்ன?

இந்தக்குழந்தைகள் அனைத்தையும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதிலும், இனப்படுகொலைகளை செய்தது தொடர்பிலும் தற்போது இருக்கின்ற அரசுத்தலைமையே நேரடியாக பங்கேற்று செயற்படுத்தியிருந்தது. எனவே கறை படிந்த கைகளிடம் நீதி கோர முடியாது என்பதனால் ஐ.நா. மன்றத்திடமும் உலக சமுதாயத்திடமும் எமது குழந்தைகளை மீட்டுத்தருமாறு கண்ணீருடன் வேண்டி நிற்கின்றோம்.

எத்தனையோ தமிழ்க் குழந்தைகள் வலிந்து காணாமல் செய்யப்பட்டிருப்பினும் வலிந்து காணாமல் செய்யப்பட்ட இருபத்தொன்பது (29) தமிழ்க் குழந்தைகள் மற்றும் சிறார்கள் பற்றிய செய்திகள் - வலிந்து காணாமல் செய்யப்பட்ட நேரத்தில் இக்குழந்தைகளின் படம் பெயர் வயது ஆகியவை உள்ளிட்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எங்கள் குழந்தைகள் எங்கே என்று கண்டுபிடிக்க ஆவன செய்யுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்: நன்றி!

*உண்மையுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் (வடக்கு கிழக்கு)*




யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்:

# 13ஆவது திருத்தத்தைக் கையிலெடுக்கிறது இந்தியா?




கடந்த சனிக்கிழமை இந்திய பிரதமரும் இலங்கை பிரதமருக்கும் இடையிலான மெய்நிகர் உச்சி மகாநாடு ஒன்று நடந்திருக்கிறது. ராஜபக்சக்கள் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றிய பின் நடந்த முதலாவது உயர்மட்ட உச்சி மகாநாடு இது. இச்சந்திப்பில் இந்தியா பதின்மூன்றாவது திருத்தத்தைக் குறித்தும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைக் குறித்தும் பேசியிருக்கிறது.

அதோடு இந்தியா இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்தும் என்றும் கூறப்பட்டுள்ளது. இவற்றுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்தம் தொடர்பான உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு என்று இந்தியா 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு மானியமாக வழங்க இருக்கிறது.

இதில் ஊடகங்களின் கவனத்தை அதிகம் ஈர்த்த விடயம் 13 ஆவது திருத்தம். பதின்மூன்றாவது திருத்தம் இந்திய இலங்கை உடன்படிக்கையின் எஞ்சியிருக்கும் ஒரே பதாங்க உறுப்பு. இத் திருத்தத்தைத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்று இந்தியா கேட்டிருக்கிறது. இது தொடர்பாக இந்தியப் பிரதமர் பேசிய பொழுது மஹிந்த ராஜபக்ச அதை பதில் ஏதும் கூறாமல் கேட்டுக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

அதன் பின்னர் அரசாங்கம் வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிக்கையில் குறிப்பாக சிங்கள அறிக்கையில் அது தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது. அதே சமயம் இந்திய வெளியுற அமைச்சு வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் அதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

உச்சி மாநாட்டுக்கு பின் இரு தரப்பும் இணைந்து உத்தியோகபூர்வமாக அறிக்கை ஒன்றை வெளியிட்ட பின் அரசாங்கம் சிங்கள மக்களுக்கு ஒரு தனி அறிக்கை வெளியிட்டிருப்பது ராஜதந்திர வழமைக்கு முரணானது. அதோடு மோடி பதின் மூன்றாவது திருத்தம் பற்றி என்ன கதைத்தவர் என்று ஊடகங்கள் கேட்டபோது தான் அதை மறந்து விட்டதாக மகிந்த பகிடியாகச் சொல்லியுமிருகிறார்.

மேற்படி உச்சி மகாநாடு இரண்டு நாட்டின் பிரதமர்களுக்கும் இடையில் இடம்பெற்றது. ஆனால் இலங்கைத் தீவின் அரசியலமைப்பின்படி இப்பொழுது நாட்டின் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சதான். ஆனால் அவரோடு இந்த உச்சி மகாநாடு நடக்கவில்லை. இந்திய பிரதமர் மோடி இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவோடு தான் பேசினார். இதற்குள் ஏதும் செய்தி உண்டா? நிறைவேற்று அதிகாரமுடைய அவருடைய சகோதரரைத் தவிர்த்து விட்டு மூத்தவரான மஹிந்தவை அழைத்துப் பேசியதன் பின்னணி என்ன?

பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது அரசாங்கத்தில் கோட்டாபய அதிகாரம் மிக்கவராக காணப்பட்டாலும் நடைமுறையில் கட்சிக்குள்ளும் அரசாங்கத்துக்குள்ளும் ஜனவசியம் மிக மூத்த பெருந் தலைவராக மகிந்தவே காணப்படுகிறார். எனவே அவருக்கு முதன்மை கொடுக்க வேண்டும் என்று இந்திய அரசாங்கம் அவரை அழைத்திருக்கலாம்.

இரண்டாவது காரணம் கோட்டாபய ராஜபக்'வும் அவருடைய அணியை சேர்ந்தவர்களும் குறிப்பாக கோட்டாவின் அரசியல் நிகழ்ச்சி நிரலை பின்னிருந்து தீர்மானிக்கும் சக்தி என்று கருதப்படும் வியத்மக என்று அழைக்கப்படுகின்ற சிந்தனை குழாமும் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக காணப்படுவதாக ஒரு கருத்து நிலவுகிறது.

குறிப்பாக தனது முதலாவது இந்திய விஜயத்தின் பின் கோட்டாபய இந்தியாவில் வைத்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த மாட்டேன் என்று கூறி விட்டே நாடு திரும்பினார். அதாவது காணி அதிகாரத்தையும் போலீஸ் அதிகாரத்தையும் மாகாண சபைகளுக்கு வழங்கப் போவதில்லை என்று அவர் இந்தியாவில் வைத்துக் கூறினார். இதில் அவர் இந்தியாவுக்கு ஒரு செய்தியை உணர்த்த முற்பட்டார். ஆனால் இப்பொழுது அவரை தவிர்த்து மகிந்தவை பேச அழைத்ததன் மூலம் இந்தியா கோட்டாபயவுக்கு ஏதும் செய்தியை உணர்த்த முயற்சிக்கின்றதா?

மூன்றாவது காரணம்- 20ஆவது திருத்தம். 20ஆவது திருத்தத்திற்கான முன்வரைபானது ராஜபக்ச சகோதரர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பின்மையை வெளிப்படுத்தி இருக்கிறதா? என்ற கேள்வி பரவலாக உண்டு. நாட்டை இப்பொழுது ஒரு சிந்தனை குழாமே-வியத்மக அமைப்பே வழி நடத்துகிறதா? என்று கேட்கப்படுகிறது. 20ஆவது திருத்தத்துக்குரிய நகல் வரைபை வியத்மக அமைப்பே உருவாக்கியதாக நம்பப்படுகிறது. அதற்கு எதிராக மகிந்தவின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு காட்டியதன் விளைவாக மகிந்த ராஜபக்ச அது தொடர்பான மீளாய்வுக்கு ஏழு பேர்கள் அடங்கிய நாடாளுமன்ற குழு ஒன்றை நியமித்திருந்தார். இக்குழுவின் ஆலோசனைகளை உள்ளடக்கி திருத்தப்பட்ட முதல் வரைபே அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்று முன்பு கூறப்பட்ட போதிலும் வியத்மகவின் முதல் வரைபே மாற்றங்கள் எவையுமின்றி அரச வர்த்தமானியில் தொடர்ந்தும் காணப்படுகிறது.

எனவே இது விடயத்தில் வியத்மகவின் கை மேலோங்கி இருக்கிறதா? அல்லது தம்பியை அண்ணன் அனுசரித்துப் போகிறாரா? என்ற கேள்வி முக்கியமானது. இப்படிப்பட்ட கேள்விகளின் மத்தியில் மஹிந்தவையே தான் அங்கீகரிப்பதாகக் காட்ட இந்தியா முயற்சிக்கின்றதா?

எனவே, பதின்மூன்றாவது திருத்தத்தை ஒரு பிடியாக வைத்துக் கொண்டு இந்தியா இலங்கை அரசாங்கத்தின் மீது தன் செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனிகின்றது என்பதனைத் தான் கடந்த வார நிகழ்வுகள் நிரூபிக்கின்றனவா?

அதுமட்டுமில்ல இதில் ஆகப் பிந்திய மற்றொரு விடயமும் உண்டு. யாழ்ப்பாணத்தில் இந்தியா ஒரு கலாச்சார மண்டபத்தைக் கட்டி முடித்திருக்கிறது. இந்தக் கலாச்சார மண்டபத்தை முதலில் யாழ் மாநகர சபையிடம் கையளிப்பதாக இருந்தது. ஆனால் யாழ் மாநகர சபையிடம் அதை நிர்வகிக்கத் தேவையான நிதி பலமும் இல்லை ஆட்பலமும் இல்லை என்று முறையிடப் பட்டதன் பின்னணியில் அக்கட்டிடம் இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட உள்ளதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது. இது போன்ற மற்றொரு கலாச்சார மண்டபத்தை இந்தியா முல்லைத்தீவிலும் கட்டிக் கொடுக்க இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே கலாச்சார மண்டபத்தின் விடயத்திலும் அது தமிழ் மக்களின் கட்டுப்பாட்டில் இல்லாமல் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சிகளை வருவதை இந்தியா எப்படிப் பார்க்கிறது?

இவ்வாறானதொரு அரசியல் பின்னணியில் தான் ராஜபக்சகளின் மீது ஏதோ ஒரு விதத்தில் தனது செல்வாக்கை பிரயோகிப்பதற்கு இந்தியா முயற்சிக்கிறது. அதற்கு 13ஆவது திருத்தத்தை ஒரு துருப்புச் சீட்டாக அவர்கள் பயன்படுத்தக் கூடும். ஆனால் நடைமுறையில் 13 ஆவது திருத்தம் என்ற ஒன்று நாட்டில் அமுலில் இல்லை. அதன் வெற்றுடல் தான் அமுலில் உள்ளது. கடந்த 33 ஆண்டுகளாக அது தேய்ந்து கொண்டே வந்தது. காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வரும் சிங்கள ஜனாதிபதிகள் மாகாணத்தின் அதிகாரங்களை எப்படி மத்திக்கு பிடுங்கிக் கொள்ளலாம் என்றே சிந்தித்து வந்திருக்கிறார்கள். அதை அவர்கள் மிகவும் தந்திரமாக செயல்படுத்தி வந்திருக்கிறார்கள். இப்போதிருக்கும் மாகாணக் கட்டமைப்பானது ஒரு கோறையான அமைப்பு. அந்தக் கோறையான உடலுக்கு மறுபடியும் உயிர் கொடுப்பது என்றால் அதற்கு இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அழுத்தங்களை பிரயோகிக்கும் நிலையில் இந்தியா இருக்கிறதா?

மோடிக்கும் மஹிந்தவுக்கும் இடையில் சந்திப்பு நிகழ்ந்த அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் மறவன்புலவு சச்சிதானந்தம் அதாவது ஈழத்து சிவசேனையின் தலைவர் ஒரு சிறு ஊர்வலத்தை நடத்தியிருக்கிறார். இந்து மதத்தின் பிரதிநிதியாக தன்னை அறிவித்துக் கொண்டு பௌத்த மதத்தின் பிரதிநிதியாக ஒரு பௌத்த பிக்குவையும் இணைத்துக் கொண்டு பசு பாதுகாப்புச் சட்டத்தைக் கோரி அந்த சிறு ஊர்வலம் நடத்தப்பட்டது. காலிமுகத்திடல் சங்கரில்லா விடுதிக்கு எதிரே தொடங்கிய ஊர்வலம் ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு முன் முடிவடைந்தது. சில வாரங்களுக்கு முன் மஹிந்த ராஜபக்ச இறைச்சிக்காக மாட்டை கொல்வதைத் தடை செய்யப் போவதாக அறிவித்திருந்தார். எனினும் அந்த முடிவு பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது. இப்பொழுது மறவன்புலவு சச்சிதானந்தம் பசுக்களைக் காப்பாற்ற போவதாக கூறிக் கொண்டு ஒரு பிக்குவோடு ஊர்வலம் செய்திருக்கிறார். அதுவும் இந்திய-இலங்கை உச்சி மாநாடு நடந்து முடிந்த அடுத்த நாள்.

உச்சி மாநாட்டுக்கு பின் இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்த மதம் சார்ந்த உறவுகளை பலப்படுத்துவதற்கு என்று கூறி இந்தியா இலங்கைக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருக்கிறது. இவற்றை எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒன்று தெரிய வருகிறது. இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு மத ரீதியாகவும் நிதி ரீதியாகவும் உதவிகளை வழங்கி தன்னுடைய செல்வாக்கு செல்வாக்கு வளையத்துக்குள் கொண்டு வரலாமா என்று தான் சிந்திக்கின்றதே தவிர அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஒரு நிலைமை இன்னமும் உருவாகவில்லை என்பதுதான். அப்படி அழுத்தங்களை பிரயோகிக்க வெளிக்கிட்டால் அது ராஜபக்சக்களை மேலும் சீனாவை நோக்கி உந்தித் தள்ளும் என்று இந்தியா அஞ்சக் கூடும். இந்த அச்சந்தானே ராஜபக்ச களின் பேர பலம்?


Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD
HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)
www.paulainslie.com
416-396-7222

# இலங்கை – மாகாண சபைகளின் எதிர்காலம் என்ன? அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும்!

இலங்கையில் நடைமுறையில் உள்ள மாகாண சபைகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற கருத்துக்கள் தற்போதைய அரசாங்கத்தின் ஒரு பகுதியினரிடம் இருந்து கிளம்பி இருக்கிறது. அதன் பொருட்டு 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாக அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் அவர்கள் கோருகிறார்கள்.

அவர்களது இந்தக் கோரிக்கை சம்பந்தமாக பிரதான எதிர்க்கட்சியான சஜீத் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியோ, ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ஜே.வி.பியோ கூட வாய் திறக்காது மௌனமாக இருக்கின்றன. ஏன் வடக்கு கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூட சிங்களப் பேரினவாதிகளின் இந்தக் கோரிக்கை பற்றி தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவிக்காமல் ஆமை தலையை ஓட்டுக்குள் இழுத்து வைத்திருப்பது போல தலையை இழுத்து வைத்திருக்கின்றது.

இந்த மாகாண சபை முறைமை ஏன் கொண்டு வரப்பட்டது, என்ன சூழலில் கொண்டு வரப்பட்டது என்பதை மறந்துவிட்டது போல பெரும்பாலான அரசியல்வாதிகள் நடித்தாலும், பொதுமக்களும் மறந்து போய் இருப்பது கவலைக்குரிய விடயம்.

இலங்கை பிரித்தானிய காலனித்துவவாதிகளிடமிருந்து 1948 பெப்ருவரி 04ஆம் திகதி சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சியதிகாரம் ஏகாதிபத்திய சார்பு சிங்களப் பேரினவாதக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடம் போய்ச் சேர்ந்தது. அந்தக் கட்சி செய்த முதல் வேலை மலையகத் தமிழத் தோட்டத் தொழிலாளர்களின் பிராஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்ததுதான். அடுத்ததாகச் செய்த வேலை வடக்கு கிழக்கில் இருந்த தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தமை.

இத்தகைய நடவடிக்கைகளை வன்மையாக எதிர்த்திருக்க வேண்டிய தமிழ் தலைமை (ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் கட்சி), அதற்கு பதிலாக அரசாங்கத்தில் அங்கம் வகித்துக்கொண்டு அரசின் தமிழின விரோத நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு நல்கியது. எனவே இன்றைய தமிழ் தலைமுறையினர் தவறாக நினைப்பது போல சிங்கள அரசியல்வாதிகளால் மட்டும் இலங்கையில் இனப்பிரச்சினை வளர்க்கப்பட்டது அல்ல. இனப் பிரச்சினை உருவாவதற்கும், பின்னர் அது பூதாகர உருவம் எடுத்ததிற்கும் தமிழ் தலைமைகளும் காலத்துக்காலம் கைகொடுத்து உதவியிருக்கின்றன.

ஆனால் தமிழரசுக் கட்சி உருவான பின்னர் இனப்பிரச்சினை தமிழ் மக்களின் மையப் பிரச்சினையாகக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் ஒரு ஜனநாயகக் கோரிக்கையாக எழுப்புவதற்குப் பதிலாக சிங்கள விரோத, தமிழ் இனவாதக் கோரிக்கையாக முன்னெடுத்தது. அதன் விளைவாக தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை சிங்கள மக்களை ஏற்க வைப்பதற்குப் பதிலாக அவர்களை எதிர்த் திசையில் நிறுத்தி வைத்தது.

இருந்தும் 1956இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் ஒன்று ஏற்பட்ட பின்னர், பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே. வி.செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி “பண்டா - செல்வா ஒப்பந்தம்” என்ற பெயரில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தினார். அந்த ஒப்பந்தப் பிரகாரம் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களால் நிர்வகிக்கப்படும் பிராந்திய சபைகள் உருவாக இருந்தன. ஆனால் ஐ.தே.க. செய்த எதிர்க் குழப்ப வேலைகளால் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது.

1965 தேர்தலின் பின்னர் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. ஏழு கட்சி கூட்டரசாங்கம் ஒன்றை அமைந்தது. அந்த அரசு அமைவதற்கு தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவும் தேவையாக இருந்ததால், தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக “மாவட்ட சபைகள்” என்ற அமைப்பை உருவாக்குவதாக டட்லி தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். ஆனால் அவர் வாக்குறுதி அளித்தபடி கடைசி வரை மாவட்ட சபைகளை அமைக்காமல் தமிழரசுக் கட்சியை ஏமாற்றிவிட்டார்.

1970இல் சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான “மக்கள் முன்னணி” அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமைந்தது. இந்தக் காலகட்டத்தில் தமிழரசுக் கட்சி சிறீமாவோ அரசுக்கு எதிராக பல சட்ட மறுப்புப் போராட்டங்களை நடத்தியதுடன், 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக “தனித் தமிழீழம்” என்ற கோரிக்கையையும் முன் வைத்தது. தமிழரசுக்கட்சியின் இந்தத் தீவிரவாதப் போக்கு தமிழ் இளைஞர்களை வன்முறைப் பாதையில் செல்லத் தூண்டிவிட்டது. முதலாவது அரசியல் கொலையாக யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா தமிழ் இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், தொடர்ந்தும் பல கொலைகள் நிகழ்த்தப்பட்டு, கொலைக் கலாச்சாரம் தமிழர் அரசியலில் துவக்கி வைக்கப்பட்டது.

தனித் தமிழீழத் தீர்மானத்தின் காரணமாக அடுத்து வந்த 1977 பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு கிழக்கின் 18 தொகுதிகளிலும் வெற்றி பெற்றதுடன், இலங்கை நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தையும் பெற்றது. ஆனால் தேர்தலின் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சுருதி மாறத் தொடங்கியதுடன், தமிழீழத் தீர்மானம் நிறைவேற்றிய அவர்கள் 1977இல் பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க. அரசியடம் சோரம்போய் எதுவித அதிகாரமும் அற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்கும் அளவுக்குச் சென்றனர். ஆனால் ஜே.ஆர். அரசு மாவட்ட அபிவிருத்திச் சபைகளைக் கூட இயங்க அனுமதிக்கவில்லை.

தமிழ் தலைமையின் இந்தத் துரோகமும், தொடர்ந்து தமிழர்களை ஏமாற்றி வந்த ஐ.தே.க. தலைமையுடன் தமிழ்த் தலைமை தொடர்ந்தும் கூடிக்குலாவியதும், தமிழ் இளைஞர்கள் மத்தியில் விரக்தியையும் கோபத்தையும் தூண்டிவிட்டது. எனவே அவர்கள் படிப்படியாக ஜே.ஆர் அரசுக்கு எதிரான ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபடத் துவங்கினர். ஆனால் ஜே.ஆர். அரசு நிலைமையை உணர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலகின் உதவியுடன் இராணுவ ஒடுக்குமுறையைத் தமிழ் மக்கள் மேல் ஏவிவிட்டது. அதன் காரணமாக இலங்கை அரசுக்கும் தமிழ் இளைஞர்களின் ஆயுத இயக்கங்களுக்கும் இடையில் முழு அளவிலான போர் ஆரம்பமானது.

அந்தக் காலகட்டத்தில் உலக அளவில் அமெரிக்க - சோவியத் வல்லரசுகளுக்கிடையில் “பனிப்போர்” நிலவியது. இந்தப் போரில் இலங்கையின் அயல்நாடான இந்தியாவில் இருந்த இந்திராகாந்தி அரசாங்கம் தன்னை சோவியத் அணியில் இணைத்துக் கொண்டது. அதன் காரணமாக இலங்கையில் அமெரிக்கா காலூன்றுவதற்கு ஜே.ஆர். அரசு உதவி புரிவதை இந்திராகாந்தி அரசு விரும்பவில்லை. எனவே ஜே.ஆர். அரசை வழிக்குக் கொண்டுவர எண்ணிய இந்திய அரசு தமிழ் இளைஞர்களின் ஆயுத நடவடிக்கைகளை ஒரு துருப்புச் சீட்டாகப் பயன்படுத்த எண்ணி அவர்களுக்கு இந்திய மண்ணில் ஆயுதப் பயிற்சி வழங்கியதுடன், ஆயுதங்கள், பணம் உட்பட பல வழிகளிலும் உதவியது.

இந்தியாவின் இந்த நடவடிக்கையால் ஆடிப்போனது ஜே.ஆர். அரசு. அமெரிக்காவாலோ அல்லது மேற்குலகாலோ ஜே.ஆர். அரசைக் காப்பாற்ற முடியவில்லை. வேறு வழியின்றி இந்தியாவின் காலில் விழுந்து சரணாகதி அடைந்தது ஜே.ஆர். அரசு. அதன் விளைவாக உருவானதே 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையின் அரசியல் அமைப்பில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் பெற்றெடுத்த குழந்தைகளே இந்த மாகாண சபைகள்.

இலங்கை தமிழ் தலைமைகள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக ஆரம்பத்தில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையையும், பின்னர் சமஸ்டி கோரிக்கையையும், அதன் பின்னர் தனிநாட்டுக் கோரிக்கையையும் முன்வைத்தன. ஆனால் அந்தக் கோரிக்கைகள் எவற்றையும் அவையால் அடைய முடியவில்லை. மறுபுறத்தில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், ஜே.ஆர். - அமிர்தலிங்கம் ஒப்பந்தம் என பல ஒப்பந்தங்கள் இலங்கை அரசுகளுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் உருவான போதும் அவையும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

முன்வைத்த கோரிக்கைகளை அடைய முடியாமலும், எழுதிய ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமலும் இருந்த சூழலில், உருவான ஆயுதப் போராட்டம் மத்தியில் உருவான இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒன்றே தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இருந்தது. தோல்வியுற்ற முன்னைய ஒப்பந்தங்களுக்கும் இந்த ஒப்பந்தத்துக்கும் உள்ள அடிப்படையான வித்தியாசம் என்னவெனில், முன்னைய ஒப்பந்தங்கள் யாவற்றிலும் இலங்கை அரசும் தமிழர் தரப்புமே கைச்சாத்திட்டன. அதனால் இலங்கை அரசுகள் ஒப்பந்தத்தை மதிக்காமல் ஒருதலைப்பட்சமாக அதை முறித்து ஏமாற்றக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை இலங்கை அரசுடன் இலங்கைத் தமிழர்கள் சார்பாக பலம் வாய்ந்த இந்திய அரசே கைச்சாத்திட்டது. எனவே இந்தியாவை இலங்கை ஏமாற்றுவது சுலபமான விடயமல்ல.

வரலாற்றில் இலங்கைத் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பு இது. இதை இலங்கை தமிழ் அரசியல் தலைமைகள் நன்கு பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவை என்ன செய்தன?

போராட்டக் களத்தில் நின்ற பிரதான இயக்கமான விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை நிராகரித்ததுமல்லாமல், பிரேமதாச தலைமையிலான ஐ.தே.க. அரசிடம் ஆயுதங்களும் பணமும் வாங்கிக்கொண்டு இந்தியாவுடன் யுத்தத்துக்குப் போனார்கள். அது மாத்திரமின்றி, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியையும் படுகொலை செய்தார்கள். அதன் மூலம் இந்திய அரசை இலங்கைத் தமிழர் பிரச்சினையிலிருந்து எட்ட நிற்க வைத்தனர். அவர்களது இந்த நடவடிக்கை ஐ.தே.க. அரசுக்கும் அதன் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி. புலிகளின் மேற்கத்திய சார்பு, சியோனிச இஸ்ரேலிய சார்பு போக்கே அவர்களை இவ்வாறெல்லாம் செய்யத் தூண்டியது.

சரி, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தவர்கள், 2000 ஆண்டில் சந்திரிக அரசாங்கம் கொண்டு வந்த, ஏறத்தாள சமஸ்டியை ஒத்த அதிகாரப் பகிர்வுத் திட்டத்தையாவது ஆதரித்தார்களா? இல்லை, அதையும் புலிகள் ஐ.தே.கவுடனும் இதர சிங்கள இனவாத இயக்கங்களுடனும் சேர்ந்து நடைமுறைப்படுத்த விடாமல் குழப்பியடித்தார்கள். இவ்வளவையும் செய்துவிட்டு இன்று மாகாண சபை பறிபோகப் போகிறதே என்று ஒப்பாரி வைப்பதில் என்ன பிரயோசனம்? இதைத்தான் சொல்வது, “பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு இருந்த கோவணத்தையும் இழந்த கதை” என்று.

தமிழ்த் தலைமைகளின் வங்குரோத்து அரசியல் இப்படியிருக்க, இன்றைய அரசுக்கு தமிழ் மக்கள் சம்பந்தமான பாரிய கடமை ஒன்றுண்டு. அதாவது அவர்களது பிரச்சினைக்கு இன்றைய சூழலில் முழுமையான தீர்வு காண்பது சாத்தியமில்லை என்றாலும், இருக்கின்ற ஒரேயொரு அதிகாரப் பகிர்வுத் தீர்வான மாகாண சபை முறைமையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஏனெனில், மாகாண சபை முறை தமிழ் பகுதிகளுக்கான இன ரீதியிலான அதிகாரப் பகிர்வு மட்டுமல்ல. அது ஒன்பது மாகாணங்களிலும் இயங்குவதால் பிராந்திய அடிப்படையிலான சிறந்த அதிகாரப் பகிர்வும் கூட. எனவே அரசாங்கம் அதில் கை வைக்குமாக இருந்தால் தமிழ் மக்களின் முற்றுமுழுதான நம்பிக்கையை இழந்து அவர்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதுடன், அரசாங்கத்தின் தற்கொலை முயற்சியாகவும் அமைந்துவிடும்.

இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது தனியே சிங்கள இனவாத வாக்குகளால்தான் என்ற ஒரு எண்ணம் சில பேரினவாத சக்திகளிடம் இருக்கின்றது. சிங்கள முற்போக்கு - ஜனநாயக சக்திகளினதும், தமிழ் - முஸ்லீம் மற்றும் மலையகத் தமிழ் மக்களினதும் கணிசமான வாக்குகளும் இந்த அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற உதவியிருக்கிறது என்பதை அரச தலைவர்கள் மறந்துவிடக்கூடாது. எனவே அவர்களின் ஆதரவு மூலம் பெற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு அவர்களது தலையில் மண்ணள்ளிப் போட நினைத்தால் அதற்கு வரலாறு தகுந்த பாடம் புகட்டத் தவறாது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, தற்போது மாகாண சபைகளின் எதிர்காலம் குறித்து சில இனவாத சக்திகளால் கிளப்பப்பட்டிருக்கும் குழப்ப நிலைக்கு ஒரு முடிவு கட்டுவதானால் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் பதவி வகிக்கும் ராஜபக்சாக்கள் மாகாண சபைகளின் எதிர்காலம் குறித்து தங்கள் அரசின் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

**நன்றி,**
**வானவில்**





Amma Brand
இப்பொழுது கனடாவிலும் கிடைக்கின்றது!
Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Amma Apple Cider with Mother Vinegar
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471
Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml
Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice with Aloe Vera
Aloe Noni with Aloevera Juice
100% HERBAL
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# நீதி கேட்கச் சென்ற ராகுல் காந்தி மீது தாக்குதலா? சர்வாதிகார ஆட்சி நடத்துகிறார் ஆதித்யநாத் : வைகோ கண்டனம்



பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட பெண்ணுக்காக நீதி கேட்கச் சென்ற ராகுல் காந்தி தாக்கப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது. உ.பி.யில் முதல்வர் யோகி ஆதித்யநாத், சர்வாதிகார பாசிச ஆட்சி நடத்தி வருகிறார் என வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து மதிமுக பொதுச் செயலாளர் வைகோ இன்று வெளியிட்ட அறிக்கை:"பாஜக ஆட்சி நடத்துகின்ற உத்தரப் பிரதேச மாநிலம், ஹத்ராஸ் மாவட்டத்தில், ஊரில் வயல்வெளியில் வேலை பார்த்துவிட்டு தனது தாயுடன் சென்றுகொண்டிருந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த 19 வயது இளம்பெண் ஒருவர் ஆதிக்க வகுப்பைச் சேர்ந்த நான்கு இளைஞர்களால் கடந்த செப்டம்பர் 14 ஆம் தேதி கூட்டுப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார்.அவர் இதுகுறித்து வெளியே கூறிவிடக்கூடாது என்பதற்காக பாலியல் வன்முறையில் ஈடுபட்ட கயவர்கள், அந்தப் பெண்ணைத் துடிக்கத் துடிக்க நாக்கை அறுத்துள்ளனர். மேலும் கடுமையாகத் தாக்கி, முதுகெலும்பை உடைத்துவிட்டு, சாலை ஓரத்தில் வீசி எறிந்துவிட்டுப் போய்விட்டனர்.குற்றுயிரும் குலை உயிருமாக மீட்கப்பட்ட அந்தப் பெண், அலிகாரில் உள்ள ஜே.என்.மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் கடந்த 28 ஆம் தேதி டெல்லி சப்தர் ஜங் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இரண்டு வாரங்களாக உயிருக்குப் போராடிய அந்தப் பெண் செப்டம்பர் 30 ஆம் தேதி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார். அவரது உடலையும் உறவினர்களிடம் ஒப்படைக்காமல், உத்தரப் பிரதேச காவல்துறையினர் எடுத்துச் சென்று எரித்து இருக்கின்றனர். நாகரிக உலகம் வெட்கித் தலைகுனியும் வகையில் இத்தகைய கொடூரத்தைச் செய்திருக்கின்ற வெறியர்களை சுதந்திரமாக உலவவிட்ட உ.பி. மாநில பாஜக காவல்துறை கூடுதல் இயக்குநர் மூலம் அந்தப் பெண் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகவில்லை என்று அறிக்கைவிடச் செய்திருப்பது பாலியல் கொடுமையைவிடக் கொடியது.உத்தரப் பிரதேச மாநிலத்தில் நடந்த இக்கொடுமையைக் கண்டித்து மாநிலம் முழுவதும் போராட்டம் நடந்து வரும் நிலையில், குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தைச் சந்திக்க ஹத்ராஸ் பகுதிக்கு இன்று சென்ற காங்கிரஸ் முன்னாள் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா இருவரும் சென்ற வாகனத்தைக் காவல்துறையினர் தடுத்து நிறுத்தி உள்ளனர்.அதனையடுத்து ராகுல் காந்தி காரிலிருந்து இறங்கி நடைபயணமாகச் செல்ல முயன்றபோது, காவல்துறையினர் தடுத்து நிறுத்த முயன்றுள்ளனர். அதனை மீறிப் புறப்பட்ட ராகுல் காந்தியை சீருடையில் இருந்த உத்தரப் பிரதேச காவல்துறையைச் சேர்ந்தவர்கள் தாக்கிக் கீழே தள்ளி உள்ளனர். உத்தரப் பிரதேசத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத், சர்வாதிகார பாசிச ஆட்சி நடத்தி வருகிறார். இளம்பெண் பாலியல் வன்முறைக்கு நீதி கேட்கச் சென்ற ராகுல் காந்தி தாக்கப்பட்டது கடும் கண்டனத்துக்குரியது. அதற்குள் இன்னொரு கொடிய நிகழ்வாக 22 வயது மற்றொரு பெண் உத்தரப் பிரதேசத்தில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட துயரச் செய்தி வந்திருக்கிறது. பாஜக ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாத மாநிலமாக உத்தரப் பிரதேசம் மாறி வருகிறது என்பதை இச்சம்பவங்கள் காட்டுகின்றன. பாலியல் வன்முறையில் ஈடுபட்ட, சமூகத்தில் வாழத் தகுதியற்ற, கொடூரக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும்". இவ்வாறு வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

## டிஜிட்டல் முறையில் கிராம சபை கூட்டங்களில் பங்கேற்க கமல்ஹாசன் முடிவு



தமிழ்நாடு முழுக்க 1,500 கிராமங்களில் டிஜிட்டல் முறையில் உரையாற்ற கமல்ஹாசன் முடிவு செய்துள்ளார். நடிகர் கமல்ஹாசன், மக்கள் நீதி மய்யம் கட்சியை தொடங்கியதில் இருந்து பல்வேறு பகுதிகளில் நடந்த கிராமசபை கூட்டங்களில் பங்கேற்று வந்தார். மேலும் கட்சியினர் மூலம் கிராமசபை குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வந்தார்.

கொரோனா ஊரடங்கு காரணமாக கடந்த மே 1, ஆகஸ்டு 15 ஆகிய தேதிகளில் கிராமசபை கூட்டங்கள் நடத்தப்படவில்லை. ஆனால் வரும் அக்டோபர் 2ந்தேதி காந்தி ஜெயந்தி அன்று தமிழ்நாடு முழுக்க கிராமசபை கூட்டங்கள் நடத்தப்பட இருக்கின்றன.

எனவே, 1,500 கிராமங்களில் டிஜிட்டல் முறையில் உரையாற்ற கமல்ஹாசன் முடிவு செய்துள்ளார். இது தொடர்பாக கட்சியினருக்கு மக்கள் நீதி மய்யம் துணை தலைவர் ஆர்.மகேந்திரன் அனுப்பி உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

கொரோனா பரவல் காரணமாக கடந்த மே 1, ஆகஸ்டு 15 ஆகிய 2 முறையும் கிராமசபை கூட்டம் நடத்தப்படாமல் கிராம வளர்ச்சிப் பணிகள், அவற்றுக்கான பட்ஜெட் ஒதுக்கீடுகள் தடைபட்டுள்ளன. எனவே, அக்டோபர் 2ந்தேதி 4 பேர் கொண்ட அணியாக கிராமங்களுக்கு சென்று கிராம முக்கியஸ்தர்களை சந்தித்து, கட்சித் தலைவர் கமல்ஹாசனுடன் டிஜிட்டல் முறையில் இணைக்க வேண்டும். 'நாமே தீர்வு: கிராமங்கள் இணைப்பு' என்ற இந்த முன்னெடுப்பை முதல்படியாக 1,500 கிராமங்களுக்கு கொண்டு செல்வோம்.

கிராமத்து இளைஞர்கள், தலைவர்களை டிஜிட்டல் முறையில் கமல்ஹாசனுடன் இணைத்து, அவர்கள் கிராம வளர்ச்சிக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விவாதிப்பதே இதன் நோக்கம். இதில், கிராம வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துரைக்க துறைசார் வல்லுநர்கள் பங்கேற்கின்றனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் கார்டன் இல்லத்தில் அதிகாரிகள் குழு ஆய்வு



சென்னை போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதா வாழ்ந்த வேதா நிலையத்தை நினைவு இல்லமாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் வேதா நிலையத்தில் நேற்று அதிகாரிகள் குழு ஆய்வு செய்தனர்.சென்னை போயஸ் கார்டனில் உள்ள வேதா நிலையத்தில் வசித்து வந்த முன்னாள் முதல்அமைச்சர் ஜெயலலிதா, கடந்த 2016ம் ஆண்டு டிசம்பர் 5ந்தேதி மரணம் அடைந்தார். அதனைத் தொடர்ந்து ஜெயலலிதா வாழ்ந்த வேதா நிலையம் நினைவு இல்லமாக மாற்றப்படும் என முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி கடந்த 2017ம் ஆண்டு அறிவித்தார்.

சட்டசபையிலும் இதற்காக மசோதா தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து, ஜெயலலிதா வசித்த இல்லத்தை நினைவிடமாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டது. அதன் அடிப்படையில் போயஸ் தோட்டம் அமைந்திருக்கும் நிலத்தை கையகப்படுத்தி அதற்கான இழப்பீடாக ரூ.68 கோடி நிர்ணயம் செய்யப்பட்டது. இந்த தொகையையும் அரசு கோர்ட்டில் செலுத்தியது.

இந்தநிலையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குனர் பொ.சங்கர் தலைமையில் தென்சென்னை வருவாய்த்துறை கோட்டாட்சியர் உள்பட அதிகாரிகள் போயஸ் கார்டனில் உள்ள வேதா நிலையத்துக்கு நேற்று வந்தனர். வேதா நிலையத்தின் ஒவ்வொரு இடத்துக்கும் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். வேதா நிலையத்தை நினைவு இல்லமாக மாற்றுவதில் உள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசித்தனர். சில மணி நேர ஆய்வுக்கு பின்னர் அதிகாரிகள் குழு அங்கிருந்து புறப்பட்டு சென்றனர்.

வேதா நிலையத்தில் அதிகாரிகள் குழு தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ள திட்டமிட்டு உள்ளார்கள் என்று தெரியவந்துள்ளது. இதன்மூலம் ஜெயலலிதா வாழ்ந்த வேதா நிலையத்தை நினைவு இல்லமாக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டு இருக்கிறது.

# மும்பை இந்தியன்ஸ் அணி 48 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி : அதிரடி காட்டிய பொல்லார்டு, ஹர்த்திக் பாண்ட்யா




"கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு எதிரான ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 48 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 13வது ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் அணியும் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் பலப்பரீட்சை நடத்தின. அபுதாபியில் நடைபெற்ற இந்தப் போட்டி இந்திய நேரப்படி இரவு 7.30 மணிக்கு தொடங்கியது.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி டாஸ் வென்று பவுலிங்கை தேர்வு செய்தது. வெற்றியை எட்டும் முனைப்போடு ரோகித் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் பேட்டிங் செய்தது. இதில் மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களின் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 191 ரன்கள் குவித்தது. ரோகித், பொல்லார்டு, ஹர்த்திக் பாண்ட்யா ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

192 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு களம் இறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி தொடக்கத்திலேயே அதிரடியை வெளிப்படுத்தியது. ஆனால் அந்த பரபரப்பு ஆட்டம் நிலைக்கவில்லை. அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி. 20 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 143 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதனால் மும்பை இந்தியன்ஸ் அணி 48 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியை பதிவு செய்தது. ரோகித் சர்மா தலைமையிலான மும்பை அணியும், ராகுல் தலைமையிலான பஞ்சாப் அணியும் நடப்பு சீசனில் தலா 4 போட்டிகளில் விளையாடியுள்ளது. இதில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ஒரு வெற்றியை மட்டுமே பதிவு செய்துள்ளது. மும்பை இந்தியன்ஸ் அணி 2 போட்டிகளில் வெற்றியடைந்துள்ளது.

இவ்விரு அணிகளும் இதுவரை 25 முறை நேருக்கு நேர் மோதியுள்ளன. அவற்றில் மும்பை அணி 14 போட்டிகளிலும், பஞ்சாப் அணி 11 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது."

**இந்தியா மற்றும் தாயகச்செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள உடனே நண்பன் இணையதளத்தில் (nanban.ca) இணைந்திருங்கள்.**

# GWC

## Gibson Wellness Centre

**வாகன விபத்தில் கடுமையாக காயம் அடைந்தீர்களா?**

We specialize in serious and catastrophic injuries.

**உங்கள் காப்புறுதி நிறுவனத்திலிருந்து உங்களுக்கான தீர்வு கிடைக்கும் வரை**

# $100,000

**வரை வட்டியில்லாத கடனாக பெற்றுக்கொள்ள எங்களை அழையுங்கள்.**

CALL NOW TO RECEIVE UP TO
$100,000 IN INTEREST-FREE LOANS
to assist with your financial needs until you receive a settlement from your insurance company

If top-notch service is your wish, don't wait, call Thavem Krish



# டரன் கிருபா

கனேடிய தமிழ் சட்டத்தரணி

Darren Kirupa, J.D.
Barrister & Solicitor

**416.904.9118**

7130 WARDEN AVE, SUITE 606
MARKHAM, ON. L3R 1S2


HSB CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Fasting made Tempting
with Special Thali
for Purtassi
புரட்டாசி மாத விரதச் சாப்பாடு கிடைக்கும்
19 Sept | 26 Sept | 3 Oct | 10 Oct
saravanaacanada
@SaravanaaBhavanCanada
www.saravanabhavan.ca
Mississauga
Hurontario and Eglinton
Intersection, 4559
Hurontario Street, Unit 12B,
Mississauga, ON. L4Z3L9
T: 905 290 0769
Scarborough
Woodside Square, Finch &
McCowan Intersection.
1571 Sandhurst Circle,
Unit 153, Scarborough,
ON. M1V 1V2
T: 416 293 7755

# பாடசாலைகளைப் பாதுகாப்பாக மீண்டும் திறப்பது அனைவருக்கும் முக்கியமானது

**அதற்காகவே** பிள்ளைகளையும் ஊழியர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஏற்ற முறையில் ஒரு விரிவான திட்டத்தை உருவாக்குவதற்கு, ஒன்ராறியோ அரசாங்கமானது சுகாதார அதிகாரிகள், பாடசாலைச் சபைகள் மற்றும் கல்வியாளர்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

- மேசைகளுக்கிடையில் அதிக தூரம் விடுதல், குறியீடுகளையும், தரை அடையாளங்களையும் இடுதல் மற்றும் ஒரு-வழிச் சிறுபாதைகள் போன்ற **உடல் ரீதியாகத் தூரப்படுத்தும்** நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும்.
- 4-12 வகுப்புகளில் உள்ள ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் **முகக் கவசங்கள் பாவிப்பது** அவசியமாக்கப்படும்.
- கை சுத்திகரிப்பு மற்றும் கை கழுவுதல் மூலம் **கைச் சுகாதாரம்** செயற்படுத்தப்படும்.
- **மேலதிகமான தாதியர்**கள் பாடசாலைகளில் இருப்பார்கள்.
- **பாடசாலையின் சுத்தம்** மேம்படுத்தப்படும்.



மேலும் அறிய **ontario.ca/ReopeningSchools** ஐப் பார்வையிடவும்.
இதற்குரிய கட்டணம் ஒன்ராறியோ அரசாங்கத்தால் செலுத்தப்பட்டுள்ளது

Ontario

# LEASE TO OWN



$58.88 WEEKLY +TAX

2020 COROLLA L CVT

1.69% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

# LEASE TO OWN



$88 WEEKLY +TAX

2020 RAV-4 LE FWD

4.99% LEASE FOR 60 MONTHS, 20,000 km/year

# USED CARS

COROLLA - 10 IN STOCK
From $10,600 + tax - 2012 & up

CAMRY - 10 IN STOCK
From $17,700 + tax - 2015 & up

RAV-4 - 15 IN STOCK
From $14,500 + tax - 2012 & up

SIENNA - 5 IN STOCK
From $30,363 + tax - 2017 & up

## USED VEHICLES

HONDA LEXUS BMW LAND ROVER

# YORKDALE TOYOTA

3080 Dufferin Street
Toronto, ON M6A 2S6

Dufferin & Lawrence

www.yorkdaletoyota.com

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

## 2021 Venza Hybrid is at the Showroom



Book for Test Drive

FOR TONY SIVA'S CLIENTS!!!

## FREE Winter Tires



with every purchase of New or Used Vehicle

$0 DOWN on New or Used Vehicles

புதிய பாவித்த
வாகனங்களை
தமிழில் உரையாடி
மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள
அழையுங்கள்



Tony Siva

647-269-0749 tonymidtown@hotmail.com

www.yorkdaletoyota.com

# இவ்வார ராசிபலன்

**02-10-2020 வெள்ளி தொடக்கம் 08-10-2020 வியாழன் வரையும்**




**மேஷம்:** பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகக்கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத்தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவ-யின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**ரிஷபம்:** ஆதாயமும், ஆதாரமும், அதிகாரமும் சேரக்கூடிய அற்புதமான வாரம். சுய விடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வேலவப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்ம பலம் பெறக்கூடிய அற்புதமான வாரம். காரியத் தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நவ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக் கூடிய வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும் நாள். ஆரோக்கியம் சீரா-கும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**சிம்மம்:** இனிய கனாக்காணவும், இன்ப உலா செல்லவும் இனிமையான வாரம். காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: சுக்கிர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**கன்னி:** வீணான அலைச்சலும், வேதனைக் காலங்களும் விலகக்கூடிய அற்புதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கனிவு தேவை. களவுப் போன பொருள் திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** வாடும் நிலை விலகி வீடு, நிலமும் வாங்கக் கூடிய நல்ல வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உடல் நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மன மகிழ்ச்சி அதிகர. இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஏழுமலை ஆண்டவர், அதிர்ஷ்ட எண்: 3,4,6,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




**விருச்சிகம்:** அனைத்து விதத்திலும் ஆதாயம் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். வாகனத்தில் செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசிர்வாதம்கிடைக்கும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுக-ளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றிதரும். நீண்டநாள் கனவு நிறைவேறும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். உத்தியோக உயர்வு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமுருகக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 3,8,4,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H




**தனுசு:** மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பக் கூடிய மகத்தான வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. பொருளாதாரம் மேம்படும். துணிவோடு செயல்படுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U.K




**மகரம்:** தொழில் வகையில் மேன்மையும், தொகை தொகையாய் லாபமும் சேரக்கூடிய வாரம். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். சேமிப்பு அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். பண வரவு மேலோங்கும். பாக்கிகள் வசூலாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். மனித நேயம் மிகுதியாகும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பிள்ளைகள் வழியில் சந்தோம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சுபச் செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவு போகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்கள மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,6,4,0
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,N




**கும்பம்:** வீரியமான செயல்பாடுகளால் விசேஷமான பலன்கள் கிடைக்கக்கூடிய வாரம். கன்னிப் பெண்களின் உற்சாகம் அதிகரிக்கும். உங்களால் மற்றவர்களுக்கு அதிகம் நன்மைகள் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். கர்ம வினைகள் அகலும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. நிதானத்தோடு செயல்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமா-கும். உடல் பொலிவு கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சுவாமி தர்ம சாஸ்த்தா, அதிர்ஷ்ட எண்: 2,1,0,0
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R




**மீனம்:** நாடிய பொருளும் தேடி வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். கடன் உபத்திரவம் குறையும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். வெற்றி நிலை தொடரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். எதிர்பாராத லாபம் சேரும். எண்ணிய காரியம் கூடும். இல்லத்தில் நல்லவை நடக்கும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பழையக் கடன் தீரும். புதிய வாய்ப்பு கூடும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண். 5,3,0,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,W




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


# இந்தியாவில் நாள்தோறும் சராசரியாக 79 பேர் கொலை செய்யப்படுகிறார்களாம்??



இந்தியாவில் கடந்த 2019-ம் ஆண்டில் நாள்தோறும் சராசரியாக 79 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2018-ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் கொலைக் குற்றங்கள் சற்று குறைந்துள்ளன என்று தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (என்சிபிஆர்) தெரிவித்துள்ளது. தேச-ிய குற்ற ஆவணக் காப்பகம் (என்சிபிஆர்) வெளியிட்ட புள்ளிவிவரத்தில் கூறப்பட்டு இருப்பதாவது: "கடந்த 2019-ம் ஆண்டில் 28 ஆயிரத்து 918 கொலைகள் நடந்துள்ளன. கடந்த 2018-ம் ஆண்டில் 29 ஆயிரத்து 17 கொலைகள் நடந்துள்ளன. கடந்த 2018-ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 2019-ல் கொலைக் குற்றங்கள் எண்ணிக்கை 0.3 சதவீதம் குறைந்துள்ளது. தகராறு காரணமாக 9,516 கொலைக் குற்றங்கள் நடந்துள்ளன. அதைத் தொடர்ந்து தனிப்பட்ட பகை, பழிக்குப் பழிவாங்குதல் போன்றவை மூலம் 3,833 கொலைகள் நடந்துள்ளன. ஆதாயத்தின் மூலம் கொ-லை செய்தலில் 2,573 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த 2019-ல் கடத்தல் வழக்குகள், கடந்த 2018-ம் ஆண்டோடு ஒப்பிடுகையில் 0.7 சதவீதம் குறைந்துள்ளன. கடந்த 2019-ல் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 37 கடத்தல் வழக்குகள் பதிவான நிலையில், 2018-ல் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 734 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



ஒட்டுமொத்த ஆட்கடத்தல் வழக்கில் 23,104 பேர் ஆண்கள், 84,921 பேர் பெண்கள். ஒட்டுமொத்தமாக 71,264 பேர் குழந்தைகள் கடத்தப்பட்டனர். இதில் 15,894 பேர் ஆண் குழந்தைகள். 55,370 பேர் பெண் குழந்தைகள். வயதுவந்தோர் 36,761 பேர் கடத்தப்பட்டனர். இதில் 7,210 பேர் ஆண்கள், 29,551 பேர் பெண்கள். 2019-ம் ஆண்டில் கடத்தப்பட்டவர்களில் 96 ஆயிரத்து 295 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். இதில் 22,794 பேர் ஆண்கள், 73,501 பேர் பெண்கள். இதில் 95,551 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். கடந்த 2018-ல் 2,278 ஆட்கடத்தல் வழக்குகள் பதிவான நிலையில், 2019-ல் 2,260 வழக்குகள் பதிவாகின. இது 0.8 சதவீதம் குறைவாகும். இதில் 6,616 பேர் கடத்தப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் பதிவானது. இதில் 2,914 குழந்தைகள், 3,702 பேர் வயதுவந்தோர். இதில் கடத்தல்காரர்களிடம் இருந்த 6,571 பேர் மீட்கப்பட்டனர்".

இவ்வாறு தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது.

# உலக முதலாளித்துவம் கொரோனா என்னும் கொடிய தொற்று நோயைக் கைவிட்டு விட்டதா?






கோவிட்-19 இறப்புக்களின் எண்ணிக்கையில் ஒரு மில்லியன் என்ற பயங்கரமான நிலையை உலகம் எட்டியுள்ளது.
209,361 இறப்புக்களுடன் அமெரிக்கா, இந்த கொடூரமான வகையில் ஏனைய அனைத்து நாடுகளை விட முன்னணியில் உள்ளது. அடுத்ததாக, பிரேசில் 141,503 இறப்புக்களுடன் இரண்டாவது இடத்திலும், மேலும் இந்தியா 95,162 இறப்புக்களுடனும் மற்றும் மெக்சிக்கோ 76,243 இறப்புக்களுடனும் அடுத்தடுத்த நிலைகளில் உள்ளன.

முதல் மூன்று நாடுகளின் வலதுசாரி சர்வாதிகார ஆட்சியாளர்களான, டொனால்ட் ட்ரம்ப், ஜாய்ர் போல்சொனாரோ, நரேந்திர மோடி, மற்றும் நான்காவது நாட்டில் “இடது” ஜனரஞ்சக வாய்ச்சவடால்காரரான ஆண்ட்ரெஸ் மானுவல் லோப்பேஸ் ஓபரடோர் ஆகியோர், தீவிர கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எதுவும் எடுக்காமல் மக்களிடையே தொற்றுநோய் வெடித்துப் பரவ அனுமதிக்கும் ஒரேமாதிரியான கொள்கைகளை ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த நான்கு கடுமையான நபர்களின் கீழ், நான்கு நாடுகளின் கொரோனா வைரஸ் காரணமான மொத்த இறப்பு எண்ணிக்கை உலகின் மொத்த இறப்பு எண்ணிக்கையில் பாதியாக உள்ளது.

Worldometer கொரோனா வைரஸ் தரவுத் தளத்தின்படி, ஞாயிற்றுக்கிழமை காலை, அமெரிக்க கிழக்கு நேரத்தின் படி, உலகளவில் கோவிட்-19 இறப்புக்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனைக் கடந்தது. அமெரிக்க ஊடகங்களில் பொதுவாக மேற்கோள் காட்டப்பட்டுள்ள Johns Hopkins தரவுத் தளம் 995,000 என்ற புள்ளிவிபரத்தை வழங்கியுள்ள நிலையில், அனைத்து கணக்கீடுகளின் படி, இன்று ஒரு மில்லியன் இறப்புக்களை அது பதிவு செய்யும்.

இந்த பெரும் சோகம், தொற்றுநோயினால் தீவிரமாக பாதிக்கப்பட்ட தொழிலாள வர்க்கத்தின் மீது இத்தகைய துயரங்களை மழை போல பொழிய அனுமதித்த ஆளும் வர்க்கங்களின் குற்றச்சாட்டாகும்.

மெக்சிக்கோவில் கோவிட்-19 இறப்புக்களின் நாளாந்த சராசரி 500 க்கு நெருக்கமாக உள்ளது, என்றாலும் அனைத்து நிபுணர்களின் கருத்துப்படி, உத்தியோகபூர்வ அறிக்கைகள் மொத்தமாக குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன. இந்த மாதம் தொடக்கத்தில், தங்களிடம் இறப்புச் சான்றிதழ்கள் தீர்ந்துவிட்டதாக வெட்கக்கேடான வகையில் அரசாங்கம் அறிவித்தது. ஆகஸ்ட் நிலவரப்படி, உத்தியோகபூர்வ இறப்பு எண்ணிக்கை 69,095 என்று இருந்தது, என்றாலும் அதிகப்படியான இறப்பு எண்ணிக்கை 122,765 என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

உலக அளவிலான மாதாந்திர இறப்புக்களின் வரைபடம். நன்றி: உலக சோசலிச வலைத் தளம் (wsws.org) Graph of monthly global deaths. Credit: wsws.org
படம் 1 நிரூபிப்பதன்படி, உலக அளவிலான நாளாந்த இறப்பு எண்ணிக்கை ஏப்ரல் மாதத்தில் உச்சத்தை எட்டி பின்னர் கிட்டத்தட்ட தொடர்ந்து நிலையாக உள்ளது. வரைபடத்தில் மஞ்சள் நிறத்தில் குறிக்கப்பட்டுள்ள செப்டம்பர் மாத நெடுவரிசை, சமீபத்திய ஏழு நாள் சராசரி மதிப்பீட்டைப் பயன்படுத்தி ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் 5,300 இறப்புக்கள் நிகழ்வதை கடந்த நான்கு நாட்கள் காண்பதை எடுத்துக்காட்டுகிறது. அனைத்து கணக்கீடுகளின் படி, தொற்றுநோய் காலம் முழுவதிலும் பயன்படுத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பதில்களும் நடவடிக்கைகளும் உலகெங்கிலுமாக வைரஸின் தாக்கத்தை மட்டும் உறுதிப்படுத்தியுள்ளன. என்றாலும், குளிர்காலம் நெருங்குகையில் அதிக மக்கள்தொகை கொண்ட வடக்கு அரைக்கோள நாடுகளில், நோய்தொற்றுக்கள் மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கைகள் மீண்டும் ஏறுமுகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிட்-19 க்கு பலியானவர்களின் உத்தியோகபூர்வ எண்ணிக்கையான ஒரு மில்லியனுடன், மருத்துவ பரிசோதகர்கள் அல்லது சுகாதார அதிகாரிகளால் கையொப்பமிடப்பட்ட மரணத்திற்கான காரணங்கள் அறியப்படாத இறப்புக்கள் அல்லது, இருதய நுரையீரல் அல்லது உறுப்பு செயலிழப்பு காரணமான இறப்புக்கள், மேலும் தொற்றுநோயின் உண்மையான தாக்கத்தை குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெரியளவில் மறைக்கின்ற வகையிலான இறப்புக்கள் என நூறாயிரக்கணக்கான இறப்புக்கள் சேர்க்கப்பட வேண்டும்.

அமெரிக்காவில் நிகழ்ந்துள்ள அதிகப்படியான இறப்புக்கள் Credit: Our World in Data.
Economist செய்தியிதழின் படி, மார்ச் மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்கு இடையில், மேற்கு ஐரோப்பா, சில இலத்தீன் அமெரிக்க நாடுகள், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கான அனைத்து காரணங்களின் அடிப்படையிலான

(தொடர்ச்சி 18ம் பக்கம்)





# சத்தியன் வசனங்கள்

கனடா வாழ் தமிழர்களுக்கான ஒரு சமூக மையம் (Tamil Community Centre) எங்கே அமைய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் எழாமல், அது ரொரன்ரோ நகருக்குள் தான் அமைய வேண்டும் என்பது உறுதி செய்யப்பட்ட பின்னர், தற்போது கிடைத்துள்ள ஒரு நற்செய்தி, அதற்கான காணி, நகரசபையினால் வழங்கப்படுவதும் உறுதியாகி விட்டது என்பதே.

இந்த தமிழர் சமூக மையம் ஒன்றின் அவசியம், பற்றிய கருத்தாடல்கள் நடத்தப்பெற்று வந்தது, இன்றோஅன்றி நேற்றோ அல்ல.

குறைந்தது நாற்பது ஆண்டு தொடர்ச்சியான இருப்பை கனடாவில் தக்க வைத்துக்கொண்டிருக்கும் எமது தமிழர் சமூகம் நல்ல அடித்தளத்தில் தான்நிமிர்ந்து நிற்கின்றது என்று ஒருவர் எழுந்து நின்று கூறினால், அனைவருமே ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு கூற்றாகவே அது கருதப்படும்.

இவ்வாறு தொடர்ச்சியாக, நாற்பது ஆண்டு காலப் பகுதியையும் மக்கள் தொகையில் நான்கு இலட்சத்தை தாண்டியும், அரசியலில் குறிப்பிட்ட நிலைகளை அலங்கரித்த வண்ணம் அவற்றின் மூலம், எமது சமூகத்தின் அடையாளம் பளிச்சென்று தெரிவதும், மேலும் மத்திய மாகாண மற்றும் உள்ளாட்சி மட்டங்களில் எம்மவர்கள் பலர் நிர்வாகப் பதவிகளில் அமர்ந்திருப்பதும், கல்வி சார் நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளை அடைந்து அவற்றுள் தங்களை உறுதியாகத் தக்கவைத்துக் கொண்டுள்ள எம்மவர்களுக்குள்ள செல்வாக்கும், எமது தமிழர் சமூகத்தின் பலத்தை நன்கு எடைபோடும் கருவிகளாக உள்ளதை நாம் மறுக்க முடியாது.



இவ்வாறு சத்தியன் மேற்கூறிய பிரிவுகளில் இவ்வளவு பலத்தை கொண்டிருக்கும் எமக்காக ஒரு சமூக மையம் அமைவது அல்லது அது நிறுவப்படுவது நமது கைகளில் கனிகள் நிறைந்திருப்பது போலவே எம்மில் பலருக்கு காட்சியளிக்கும்.

ஆனால் இவ்வாறான சமூகம் சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவை தொடர்பான எதிர் விமர்சனங்கள் எழுந்து நின்று தாண்டவம் ஆடி எதையுமே நிறைவேற்ற முடியாமற் போன பல காட்சிகள் எமக்கு நிச்சயமாக கண்களுக்கு முன்னால் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும். ஆனால் ஒன்று உறுதியாகி விட்டது. அதுதான் தமிழர் சமூக மையம் அமைவதற்குத் தேவையான நிலம் கிடைத்துவிட்டது. இந்த செய்தியை இன்று சத்தியன் வாசித்த போது, கட்டடத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது போன்ற ஒரு உணர்வைப் பெற்றது போன்று இருந்தது.

தமிழர் சமூக மையம் அமைவதற்கான சமூகம் சார்ந்த கலந்துரையாடல்களில் சத்தியனம் கலந்து கொண்டது ஞாபகத்திற்கு வருகின்றது.

தொடர்ந்து அமைக்கப்பெற்றது. (அந்தக் குழு அங்கத்தவர்கள் ஒன்றாகக் கூடி எடுத்த படம் இங்கே காணப்படுகின்றது.) இதில் அடங்கும் ஒவ்வொருவரும் வெவ்வேறான துறை சார் அனுபவமும் அறிவும் படைத்தவர்கள் என்பதும் உறுதி செய்யப்பட்ட ஒன்றுதான். அதனால் தான் அவர்கள் ஒன்று சேர்ந்து, எவ்விதமான ஆர்ப்பாட்டங்களும் இன்றி சமூக மையத்திற்கு அடித்தளமாக விளங்கப்போகின்ற நிலத்தை இன்று பெற்றுள்ளார்கள்.

இனி அடுத்து உள்ள விடயம் நிதி சார்ந்தது. கட்டடத்தை நிர்மானிப்பது மட்டுமல்ல, கட்டடத்திற்கு உள்ளே அமையப் போகின்ற பல பிரிவுகள், மண்டபம், கலைக் கூடம், நூலகம், நினைவு மண்டபம், பொழுது போக்கு அல்லது உள்ளக விளையாட்டுப் பகுதி ஆகியவற்றுக்கு தேவையான பாரிய நிதி, இவைதான் அடுத்து இந்தக் குழுவிற்கு மாத்திரமல்ல, எமது சமூகத்தின் முன்னால் உள்ள "சுமை" ஆகும்.

அந்த "சுமையை" சற்று "இறக்கி" வைத்துவிட்டு, இந்த பிரதேசத்தில் இயங்கிவரும் வேறு சமூகங்கள் சார்ந்த சமூக மையங்கள் இரண்டிற்கு உங்களை சத்தியன் அழைத்துச் செல்ல வேண்யுள்ளது.

முதலாவது, விக்ரோரியாப் பார்க்-பெருந்தெரு 401 சந்திப்பிற்கு அருகே கம்பீரமாக எழுந்து நிற்கும் "ஆர்மேனியன்" இளைஞர் கழகத்தின் மையம். அடுத்தது செப்பேர்ட் அவென்யூ கிழக்கு - மார்க்கம் வீதி சந்திப்புக்கு அருகில் அழகுறக் காட்சி தரும் "சீன" க் கலாச்சார மையம்.

இந்த இரண்டு சமூக மையங்களும் எமது தமிழர் சமூகத்திற்கு அந்நியமானவை அல்ல. எமக்கும் இந்த சமூக நிறுவனங்களுக்கும் உள்ளே தொடர்பு மிக அதிகம். அதுவும் நிதியளவில் விசாலமானது.

இந்தப் பதிவின் ஆரம்பத்தில் சத்தியன் குறிப்பிட்டது போல எமது சமூகம் இங்கு காலூன்றிய பின்னர் எமது நிகழ்வுகளை வாரா வாரம் இந்த இரண்டு மையங்களில் உள்ள மண்டபங்களில் நடத்தியதற்கு எத்தனைமில்லியன் டாலர்களை நாம் செலுத்தியிருப்போம் என்பதை கணக்கிடுவது மிகவும் இலகுவானது. ஏனென்றால் அந்த செலவுகள் வெளிச்சத்தில் தெரிகின்றவை.

சத்தியன் இந்த மண்டபங்களில் நடைபெறும் விழாக்களுக்கு வாரா வாரம் செல்வதுண்டு. இப்போது "கொரோனா" என்னும் தடை உத்தரவினால் அனைத்தும் தடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சத்தியன் அங்கு செல்லுகின்றபோது, அவரிடத்தில் அருகே வரும் சில ஆர்வமுள்ள நண்பர்கள் உரையாடல்களுக்கிடையில், இந்த சமூக மையங்கள் தொடர்பாகவும் குறிப்பிடுவார்கள்.

"அண்ணை! சீனனும் ஆர்மேனியனும் இப்படி அழகான கட்டடங்களைக் கட்டின மாதிரி, ஏன் எங்கட ஆட்களால கட்ட முடியாமல் இருக்கு?" என்று கேட்பார்கள்.

அதற்குரிய பதிலை சத்தியன் உடனடியாக வழங்க வேண்டும் என்று கூட அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். சத்தியன் கூட, மிகவும் பரந்த ஒரு விடயத்திற்கு ஓரிரு வார்த்தைகளில் பதில் சொல்லுவதற்கும் முன்வருவதில்லை. இவ்வாறான கேள்விகள் பல சந்தர்ப்பங்களில் சத்தியனிடம் கேட்கப்பட்டுள்ளன. அவர்கள் இதுவரை எத்தனை பேரிடம் இந்த கேள்வியை கேட்டுள்ளார்கள் என்பது கூட சத்தியஷனுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

ஒரு நாள் சத்தியன் சீனக் கலாச்சார மையத்திற்குச் சென்றபோது அங்கு கடமையிலிருந்த உத்தியோகத்தர் ஒருவர் மிகவும் திறந்த மனதோடு சமூக விடயங்களை பகிர்ந்து கொண்டதால், பொறுத்தமான ஒரு இடத்தில் சத்தியன் அவரிடத்தில் ஒரு கேள்வியை கேட்க முடிந்தது.

இப்படியான ஒரு பிரமாண்டமான கட்டடத்தை எவ்வாறு உங்கள் சீனச் சமூகத்தால் நிர்மானிக்க முடிந்தது? என்பதே அந்த கேள்வி. அந்த உத்தியோகத்தர் சிரித்து விட்டு "கம் வித் மீ:" என்று கூறிய வண்ணம் சத்தியனை ஒரு இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

முக்கியமான ஒரு இடத்தில் பதியப்பட்டிருந்த ஒரு பளிங்குக் கல்களால் செய்யப்பட்ட ஒரு அறிவித்தலை சத்தியனுக்குக் காட்டினார் அந்த சீன அன்பர்.

"வாசியுங்கள்" என்றார் சத்தியனிடம்.. அதை அமைதியாக வாசித்த போது தான் இந்த விடயம் எவ்வளவு சவால்கள் நிறைந்தது என்பதை சத்தியனால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

அதில் குறிப்பிட்டிருந்தது என்னவென்றால், சீனக் கலாச்சார மண்டபத்தைக் கட்டி முடிக்க செலவ செய்யப்பட்ட தொகையும. எந்த வழிகளில் அந்த நிதி கிடைத்தது என்பதும் தான் அங்கே பதிக்கப்பட்டிருந்தது.

அதில் சீன மக்கள் சமூக மட்டத்தில் சேகரிக்கப்பெற்ற தொகை கிட்டத்தட்ட 40 வீதம். மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் உள்ளாட்சி மன்றம் ஆகியன 40 வீதம். மிகுதி 20 வீதம் வேறு பல வழிகளில் சேகரிக்கப்பெற்றது என்பதே அதில் எழுதப்பட்டிருந்தது.

இதை ஏன் இந்த இடத்தில் குறிப்பிடவேண்டிய ஒரு முக்கிய தேவை ஏற்பட்டது என்றால், கட்டத்தை நிர்மானிக்க வேண்டிய நிதிதான் இனி எமது சமூகத்தின் முன்பாக உள்ள ஒரு பாரிய பொறுப்புக்கள் கொண்ட சவால் அலலது பணி.

தற்போது உள்ள அரசு சார்ந்த நிதி உதவிகள் கிடைப்பதில் வேறு வழிகள் அலலது நிபந்தனை உள்ளனவோ சத்தியனால் கூற முடியாது. ஆனால் குறிப்பிட்டளவு நிதியை சேகரிக்க வேண்டிய பொறுப்பு எமது தமிழர் சமூகத்தின் கைகளில் தான் உள்ளது. இது சாத்தியமா என்று யாராவது கேட்கலாம்.

கனடிய தமிழர் சமூகம்தான், ஹவார்ட் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைவதற்கு பெருந்தொகையான டாலர்களை சேகரித்துக் கொடுத்தது. அதற்காக உழைத்தவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே ஆனாலும் அவர்கள் மீது செலுத்தப்பட்ட விமர்சனங்கள் எண்ணிக்கையில் அடங்காது. ஆனால் அந்த தமிழ் இருக்கைக்கு சேகரிக்கப்பட்ட முழுநிதியும் எமது தமிழர் வர்த்தக சமூகத்தால் மாத்திரம் வழங்கப்பட்டது அல்ல.

"நிதி மிகுந்தவர் பொற்கு குவை தாரீர். நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் என்ற கூற்றுக்கு இணங்க வசதிகள் அற்றவர்களும் தங்களால் இயன்ற நிதி அன்பளிப்பை தயங்காமல் கொடுத்துதவினார்கள் அன்று.

தொடர்ந்து ரொரன்ரொ பல்கலைக் கழகத்தில் அமையவுள்ள "தமிழ் இருக்கை" க்கு தேவையான நிதி சேகரிக்கும் முனைப்பு.

இந்த முயற்சியும் மிகுந்த சிரமங்களுடன் தொடர்ந்து கொண்டிருக்கையில் கொடிதான "கொரோவின்" தாக்கத்தினால் அந்த நிதி சேகரிப்பு சற்று ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளது.

மிக அண்மையில் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் தனக்கென ஒரு சொந்தமன கட்டடத்தை கொள்வனவு செய்தது. அது சிறிய திட்டமாக இருந்தாலும் மிகுந்த சிரமங்களின் மத்தியிலேயே அந்த கனவு நனவாகியது. இந்த விடயத்தை சத்தியன் இங்கு பதிவு செய்கின்ற போது மற்றுமொரு தமிழர் சமூகம் சார்ந்த அமைப்பு பற்றிய சத்தியன் குறிப்பிட வேண்டியது சத்தியமாக கருதப்பட வேண்டியதாகும்.

எமது சமூகத்தில் தமிழிசை தொடர்பான உயர்ந்த பணிகளில் நீண்ட காலமாக உழைத்து வரும் ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றம் கூட தனது சொந்த நிதியில் ஒரு கலாச்சார மண்டபத்தை நிறுவி அதனை மூலம் எமது சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அதே வேளை அதன் மூலம் தங்கள் செலவுகளை சமன் செய்யும் அளவிற்கு வருமானத்தையும் பெற்று வருகின்றது.

இந்த விபரங்களை சத்தியன் பதிவு செய்ய விரும்பியதற்கு காரணம் வாசிப்பவர் மத்தியில் சலிப்பை ஏற்படுத்தவதற்கு அல்ல. நிதி சேகரிப்பு தொடர்பான சிரமங்கள் மற்றும் சவால்கள் ஆகியவற்றை புரிந்து கொள்வதற்கும், அதன் மூலம் தெளிவைப் பெறுவதற்குமே ஆகும்.

இறுதியாக, இந்த பணியை மேற்கொண்டு எடுத்துச் செல்லும் வகையில் நிறுவப்பட்டுள்ள மேற்படி குழுவிற்கு சத்தியனின் வாழ்த்துக்களும் அவர்களது தொடரும் முயற்சிகளில் வெற்றிகள் கிடைக்வும் பிரார்த்தனைகளும் உண்டு.



## உலக முதலாளித்துவம் கொரோனா என்னும் கொடிய தொற்று நோயைக் கைவிட்டு விட்டதா?

(16ம் பக்கத் தொடர்ச்சி)

இறப்பு தரவுகளும், மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் 900,000 அதிகப்படியான இறப்புக்கள் நிகழ்ந்துள்ளதைக் காட்டின. என்றாலும், 580,000 இறப்புக்கள் மட்டுமே கோவிட்-19 இன் காரணமாக ஏற்பட்டவை. இது,
கோவிட்-19 இறப்புக்களின் உண்மையான எண்ணிக்கை, Worldometer மற்றும் Johns Hopkins போன்ற தரவுத் தளங்கள் உத்தியோகபூர்வ இறப்பு அறிக்கைகளின் அடிப்படையில் பராமரிக்கும் புள்ளிவிபரங்களைக் காட்டிலும் 55 சதவிகிதம் அதிகம் என்று அறிவுறுத்துகிறது.

அமெரிக்காவின் உண்மையான இறப்பு எண்ணிக்கை 300,000 க்கு நெருக்கமாக உள்ள நிலையில், அது 30 சதவிகிதம் குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கலாம் என்று Economist குறிப்பிடுகிறது. அவர்களது மதிப்பீடுகளின்படி, தொற்றுநோயின் காரணமாக உலகளவில் நிகழ்ந்த உண்மையான இறப்புக்களின் எண்ணிக்கை இரண்டு மில்லியனுக்கு நெருக்கமாக இருக்கலாம்.

இந்த அதிகப்படியான இறப்புக்களில் சில வைரஸின் காரணமாக ஏற்பட்டது என்பதை விட, தொற்றுநோய் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைபொருளாக அது உள்ளது. அடைப்பு மற்றும் நிதி நெருக்கடிகளைச் சுற்றியுள்ள சமூக நெருக்கடி என்பது, கொரோனா வைரஸ் நோய் தொற்றிக் கொள்ளும் என்ற நியாயமான பயத்தை தாண்டி சுகாதாரப் பிரச்சினைகளுக்காக மருத்துவ கவனிப்பை நாடுவதிலிருந்து மக்களைத் தடுக்க வழிவகுத்தது.

ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு மையத்தின் இயக்குநரான Tom Inglesby, “அமெரிக்கர்கள் தங்களது ஆரோக்கியத்தை பேணும் வகையில் எல்லா நேரங்களிலும் செய்து கொள்ளக் கூடிய ER பரிசோதனைகளும், தேந்தெடுக்கப்பட்ட அறுவைசிகிச்சை தொடர்பான ஆய்வுகளும், அதிர்ச்சியூட்டும் வகையில் நீண்ட காலமாகவே வீழ்ச்சியடைந்துள்ளது” என்று வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு தெரிவித்தார்.

மாரடைப்பு, முதுமறதி (Alzheimer) மற்றும் முதுமை, நீரிழிவு மற்றும் பக்கவாதம் ஆகியவற்றால் ஏற்படும் இறப்புக்களுக்கான வாராந்திர மதிப்பீடுகள் மார்ச் முதல் ஆகஸ்ட் வரையிலான காலகட்டத்தில் தொடர்ந்து அடிப்படையான எண்ணிக்கைக்கு அதிகமாக இருந்தன. பாஸ்டன் பல்கலைக்கழகம், ராபர்ட் வுட் ஜோன்சன் அறக்கட்டளை மற்றும் பென்சில்வேனியா பல்கலைக்கழகம் ஆகியவற்றின் தரவுகளின்படி, அதிகப்படியான இறப்புக்களில் 20 சதவிகிதம், ஏழை சமூகங்களில் மிக மோசமான பாதிப்பை விளைவித்த கோவிட்-19 ஐ காட்டிலும் ஏனைய காரணிகளுடன் தொடர்புபட்டுள்ளன.

இந்த தடுக்கக்கூடிய சோகம் குறித்த பரிமாணத்திற்கான சூழலை வழங்கும், அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் 2017 இல் 2,813,503 இறப்புக்களை பதிவு செய்தன. 2020 ஆம் ஆண்டில் “சாதாரண” இறப்பு எண்ணிக்கை ஏறக்குறைய அதனை ஒத்திருக்கும். இதற்கான அர்த்தம் என்னவென்றால், இந்த ஆண்டு, கோவிட்-19 இறப்புக்கள் மொத்த அமெரிக்க இறப்புக்களில் அண்ணளவாக பத்து சதவிகித அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது என ஏற்கனவே கணக்கிடப்பட்டுள்ளது, மேலும் இன்னும் பல மாதங்கள் இப்படியே தொடரும் என்பதாகும்.

உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிபரங்களின்படி, உலகளவிலான ஒரு மில்லியன் கோவிட்-19 இறப்புக்கள் என்பது 2019 ஆம் ஆண்டில் எய்ட்ஸ் தொடர்புபட்ட நோய்களால் 690,000 பேர் இறந்ததை காட்டிலும் அதிகமானதாகும். 2016 ஆம் ஆண்டில், 216 மில்லியன் மக்களை பாதிப்புக்குள்ளாக்கிய மலேரியா 445,000 இறப்புக்களுக்கு வழிவகுத்தது. 2018 இல், காசநோய் 1.5 மில்லியன் பேரைக் கொன்றது. தொற்றுநோயினால் விளைந்த பொருளாதார தாக்கம், ஏழை மக்களைப் பொறுத்தவரை, பள்ளிகள் மூடப்பட்டதால் அவர்களது கல்வியில் பின்னடைவைக் கொண்டுவந்தது, முக்கியமான தடுப்பூசி திட்டங்கள் அவர்களுக்கு கிடைக்காமல் போனது, மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மருந்துகளை அவர்கள் அணுகுவது குறைந்தது என்ற வகையில் அவர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. இதன் பொருள் என்னவென்றால், தொற்றுநோயின் தாக்கம் உலகளவில் பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அதன் பின்னர் குறையும் அல்லது அதற்கு ஒரு தடுப்பூசி கண்டுபிடிக்கப்படலாம்.

இரண்டு டாலருக்கு குறைவான தொகையில் ஒரு நாளை கழிக்கும் மிக வறிய மக்களின் எண்ணிக்கை, இந்த ஆண்டு 70 முதல் 100 மில்லியன் வரை அதிகரிக்கும் என்று உலக வங்கி முன்கணிக்கின்றது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, கோவிட்-19 தொடர்புபட்ட பசி பட்டினியால் ஒரு நாளைக்கு 12,000 பேர் வரை, அதாவது தற்போது இந்த நோயால் இறப்பவர்களை விட அதிகமானவர்கள் இறக்கக்கூடும் என்று ஜூலையில் ஆக்ஸ்ஃபாம் அமைப்பு ஒரு ஊடகத்தில் சுருக்கமாக குறிப்பிட்டது.

ஆக்ஸ்ஃபாம், “மோதல்கள், காலநிலை மாற்றம், சமத்துவமின்மை, மற்றும் மில்லியன் கணக்கான உணவு உற்பத்தியாளர்களையும் தொழிலாளர்களையும் வறிய நிலைக்கு தள்ளிய உடைந்து போன உணவு முறை ஆகியவற்றின் தாக்கங்களுடன் ஏற்கனவே போராடும் மில்லியன் கணக்கான மக்களின் உயிர்களுக்கு இந்த தொற்றுநோய் இறுதி வைக்கோலாகும். இதற்கிடையில், உயர் மட்டத்தில் உள்ளவர்கள் தொடர்ந்து இலாபம் ஈட்டுகின்றனர்: அதாவது உலகம் முழுவதும் தொற்றுநோய் பரவி வரும் நிலையில் கூட, மிகப்பெரிய உணவு மற்றும் பான வகை நிறுவனங்களில் எட்டு நிறுவனங்கள் பங்குதாரர்களுக்கு ஜனவரி முதல் 18 பில்லியன் டாலருக்கு அதிகமாக பங்குத்தொகை வழங்கியுள்ளது” என்று குறிப்பிட்டது.

2019 ஆம் ஆண்டில், 821 மில்லியனுக்கும் கூடுதலான மக்கள் உணவு பாதுகாப்பு இல்லாதவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டனர், இதில் சுமார் 149 மில்லியன் பேர் “நெருக்கடி நிலை பசி அல்லது மோசமான நிலைமையால்” பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த எண்ணிக்கை ஆண்டின் இறுதிக்குள்ளாக 270 மில்லியனாக அதிகரிக்கும் என்று உலக உணவுத் திட்டம் மதிப்பிடுகிறது, அதாவது 82 சதவிகித அதிகரிப்பாகும்.

இந்த பூகோள ரீதியான சமன்பாட்டில் முக்கியமானது SARS-CoV-2 க்கு எதிரான தடுப்பு மருந்து அதிகரிப்பும், மற்றும் இந்த உயிர் காக்கும் நடவடிக்கைகளை அணுக முடிவதும் ஆகும். இந்த தடுப்பு மருந்துகளுக்கான சோதனைகள் நெறிமுறையுடனும் சரியான முறையிலும் நடத்தப்படுமா என்பதும் கேள்விக் குறியே, அத்துடன் அனைத்து மதிப்பீடுகளின் படி, அடுத்த ஆண்டு வசந்த காலம் அல்லது கோடை காலம் வரை தேவையான தகவல்களும் கிடைக்காது. கூடுதலாக, தடுப்பு மருந்துகளின் உற்பத்தியும் விநியோகமும் பெரும்பாலும் தோல்வியுற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் நிதிய பொறிகளை கட்டாயப்படுத்தும் ஒரு அரசியல் சூழ்ச்சியாகவே பயன்படுத்தப்படும்.

இந்த மில்லினுக்கு அதிகமான மக்கள் இறப்பு என்பது, நிதிய தன்னலக்குழுக்களும் முதலாளித்துவ உற்பத்தி முறையும் தொற்றுநோய்க்கு அவர்களது குற்றகரமான பதிலிறுப்பு குறித்து எந்தவித பொறுப்பும் ஏற்காமல் கைவிட்டன என்பதற்கான தெளிவான அறிகுறியாக உள்ளது. எந்த அளவிலும், தொற்றுநோய் இன்னும் வெடித்து பரவுவதற்கான வாய்ப்பு உள்ளது என்ற நிலையில், இந்த எரியும் நெருப்பை உடனடியாக தணிக்கும் முக்கிய அக்கறை தொழிலாள வர்க்கத்திடம் மட்டுமே உள்ளது. மேலும், மேலதிக உயிரிழப்புக்களைத் தடுக்கும் திறனும் அவர்களுக்கு மட்டுமே உண்டு.

*பாலுவுக்கு ஓர் அஞ்சலி...*

# “தமிழோடு இசை பாடல் மறந்தறியான்”

பொங்கி வரும் புது நிலவு
பூந்தென்றல் காற்று
பொதிகை மலைச்சந்தனம்
குயில் பாடும் புதுராகம்
இவற்றுடனே பனித்துளியின்
ஈரலிப்பும் கொஞ்சம் சேர்த்து
இயற்கையெனும் இளையகன்னிக்கு
ஆயிரம் நிலாவை வரவழைத்து
அமுதகானமிசைத்த கந்தர்வக் குரலோன்
கந்தர்வர்கள் நடமாடும் தேவசபையில்
தமிழோடு இசைபாடச் சென்றதினால்
பூலோக வாசிகளின் இசையரங்கும் - தமிழரங்கும்
கூடவே சகோதர மொழி பதினாறு அரங்குகளும்
இசைமீட்டி ஒலி சேர்க்கும் கூடங்களும்
வெறிச்சோடிக் கிடக்கின்றன!

ஆனாலும் அவர் இசைத்த பாடல்கள் பல நூறு - ஆயிரம்,
காற்றலையில் கலந்துதான் அலை கடந்து
மலை கடந்து ஐம்பெரும் ஆழிகடந்து
தேன் கலந்து ருசிப்பதுவாய் - மயிலிறகு தடவுதல் போல்
வானிருந்து வந்த தேவதையின் முத்தம் போல்
ஊன்உடம்பின் செவிவழியே தேனிசையாய் ஒலிக்கிறது!



எனது நினைவு தடுமாறாமலிருந்தால்1989 அல்லது 1988 முதன்முறையாக ரொறன்ரோ நகரில் மெல்லிசை மன்னர் எம்எஸ்வி குழுவினருடன் எஸ்பிபியும் இணைந்து வந்து கலந்து சிறப்பித்த மெல்லிசை கச்சேரியில் தான் அவரது குரல் இனிமை நேரில் என்னை மெய் மறக்கச் செய்தது. உண்மையைச் சொல்வதானால் இயல்பாக பாகவதரின் சாயலோடு பாட்டிசைத்து ரி எம் எஸ் மற்றும் சீர்காழி கோவிந்தராஜன் - திருச்சி லோகநாதன் - சி எஸ் ஜெயராமன் - ஏ எம் ராஜா ஆகியோரின் ஆண்குரலோசைகளில் மயங்கியவன் நான்.

அதுவும் சி ஆர் சுப்பராமன், எஸ்எம் சுப்பையா நாயுடு, ஜி ராமநாதன் ஐயர் ஆகியோரின் இசை வாத்திய ஒலிக்கலவையில் மகுடிக்கு மயங்கிய நாகமானவன் சிறிது சிறிதாக திரைஇசைத் திலகம் கேவி மகாதேவனுக்கும் - எம்எஸ்விக்கும் மயங்க ஆரம்பித்து குளியலறை பாடகனாக பரிணமித்த வேலை பாடும் நிலாவின் வருகை என்னை புதிய பரவசத்திற்கு உள்ளாக்கியது மட்டுமல்ல... அவரிடத்துள்ள வித்துவச் செருக்கற்ற குணவியல்பும் - பண்பும் என்னை அவர்பால் காதல் கொள்ள வைத்தது.

ஒரு சம்பவத்தை கூறி எனது அஞ்சலியை நிறைவு செய்கிறேன்.

ஒருசமயம் (1996) சென்னை நகர் சென்றவேளை அன்பு அறிவிப்பாளரும் - அருமை நண்பருமாகிய திரு பி எச் அப்துல் ஹமீது என்னை கவிப்பேரரசு வைரமுத்து இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். எனது கவிதை நூலொன்றுக்கு அணிந்துரை வாங்கும் நோக்குடன் அவர் இல்லம் சென்றோம். மாசிமாத கொளுத்தும் வெயில். ஒரு பகல் பொழுதில் கவிஞர் இல்லத்தில் தாகத்திற்கு மோர் அருந்தியபடி உரையாடிக் கொண்டிருந்தோம். இடையே கவிஞர் கூறினார், ’ஒரு பட பூஜைக்குப் போகவேண்டும். உங்களுக்கு வேறு காரியம் இல்லாவிடில் நீங்களும் வாருங்கள் வேடிக்கை பார்க்கலாம் என்றார்.

‘ரட்சகன்‘ என்கிற படத்திற்கான பூஜை. நாங்கள் அந்த மண்டபத்திற்கு போக முன்னமேயே ‘விஜய சேஷ மஹால்‘ என்கின்ற அந்த அரங்கம் நிரம்பி வழிந்தது. தெலுங்கு நடிகர் நாகார்ஜு னா கதாநாயகன் ஆனபடியால் தெலுங்கு ரசிகர்களே கோலோச்சி முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். கோடம்பாக்க சினிமா முதலாளிகள் தயாரிப்பாளர்கள், நடிகர், நடிகைகள் குறிப்பாக சிவகுமார், ரகுவரன், ஸ்ரீவித்யா, பிரபுதேவா, சின்னிஜெயந்த், பொன்னம்பலம் என பல துணை நடிகர் பட்டாளங்கள் இருக்கைகளை ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் கவிஞர் நேரடியாக மேடையில் போய் உட்கார்ந்து விட்டார். ஹமீத் அவர்களைக் கண்ட எஸ்பிபி ஓடோடி வந்து அணைத்துக் கொண்டார். அவருடன் கூடவே வந்த என்னையும் அறிமுகம் செய்து வைத்தார் ஹமீது. கொஞ்சம் பொறுங்கள் எனக் கூறியபடி எங்கேயோ விரைவாகச் சென்று இரு நாற்காலிகளைக் கொண்டு வந்து மேடைக்கு முன் இருந்தவர்களை பின்னுக்குத் தள்ளி உட்காரச் சொல்லிவிட்டு எங்கள் இருவரையும் முக்கிய விருந்தாளிகளாக்கிய உயர்ந்த பாலுவின் பண்பு இன்றுவரை எனது நெஞ்சில் பசுமையாக!

இன்று அவருக்கு தேவசபையில் உயர்ந்த நாற்காலி! மனிதர்களுக்கு பாடியது போதும் இனி மகாதேவன் முன்னிலையிலேயே எனது இசைக்கச்சேரி என பெரும் பேறும், பேரின்ப வாழ்வும் பெற்ற அமரலோகப் பாடகனாகப் பதவியுயர்வு பெற்ற பாடும் நிலா பாலுவுக்கு எனது இதயபூர்வ அஞ்சலிகள்! காற்றுள்ள வரை அவரது காந்தக் குரல் எத்திசையும் கானமிசைக்கும்! ஆழிசூழ் உலகெங்கும் பாலு புகழ் எதிரொலிக்கும்!

**-வீணை மைந்தன்**

*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#15

நடிகர்திலகம் அவர்களது 92-வது பிறந்த நாள் நினைவு கட்டுரை...



அக்டோபர் முதல் நாள் சிவாஜி ஐயாவின் பிறந்த நாளாகும். "தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" எனும் தெய்வப்புலவர் வாய்மொழிக்கொப்ப எடுத்துக் கொண்ட காரியத்தில் - செயலில் - தொழிலில் முன்னுக்கு வந்தவராக, அதன்வழி புகழுக்குரியவராக ஆயுள்வரை வாழ்ந்து, தொடர்ந்தும் மக்கள் மனதில் மொழியாலும் கலையுணர்வாலும் - இனமானப்பற்றாலும், இறையுணர்வும் நாட்டுப்பற்றும் எனது இரு விழிகளாகும் என லட்சியம் மிகுந்ததாலும் எம்மிடையே தோன்றி எங்கள் காலத்திலேயே வாழ்ந்து தமிழன்னையின் தவப்புதல்வனாகப் போற்றப்படும் கலாபுரு'ராம் நடிகர் திலகம் அவர்களைப் பற்றி பேசுவதும் எழுதுவதும் நினைப்பதும் அவரை ரசிப்பதும் என்பது பெருமையான விடயம் என்று கருதுபவன் நான்.

சினிமா எனும் செலுலோயிட் கலைவடிவம் திரையில் காட்சியளித்த நாள் முதல் தமிழர்களின் சாயங்காலப் பொழுதைச் சந்தோசமாக அனுபவிக்கத் தூண்டிய கதாநாயகர்களில் முதன்மையானவர் நமது நடிகர் திலகமே என்றால் மிகையாகாது!

அது மட்டுமல்ல! சிவாஜி என்கின்ற மானுடக் கலைஞனுக்கூடாக பல தேசியத் தலைவர்களையும், மாமனிதர்களையும், புகழடைந்த கலைஞர்களையும், அந்நிய தேசத்து அதிபர்களையும், அறிஞர்களையும் சந்தித்து தொட்டுப்பார்த்து மெய்சிலிர்த்த அனுபவத்தை உணர்ந்தவன் - பாக்கியம் பெற்றவன் நான்! எப்படியெனில் "மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம்" என வள்ளுவப்பெருந்தகை கூறியது போன்று ஐயா அவர்களைச் சந்தித்த வேளையில் அவரை தீண்டியதால் ஏற்பட்ட ஸ்பரிச சுகம் மெய்சிலிர்ப்பு பல்வேறு உணர்வுகளை என்னுள் ஏற்படுத்தியது. மழலைகளையும், குழந்தைகளையும் அணைக்கும் போதும், தொடும்போதும் அனுபவிக்கும் "தீண்டும் இன்பம்" தான் வள்ளுவர் சொல்லியது!. அதேபோன்று சிவாஜி ஐயாவை தொடும்போது அவர் தொட்டு வணங்கிய காஞ்சி பெரியவாள், சத்யசாய்பாபா, மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார், போன்ற ஆன்மீகப் பெரியார்கள், மறைந்த பாரதப் பிரதமர் நேருஜி, அறிஞர் அண்ணா, கவியரசு கண்ணதாசன், மக்கள் திலகம் எம்ஜிஆர் ஆகிய தலைவர்களையும் எகிப்து அதிபர் நாசர், மற்றும் அமெரிக்க ஹாலிவுட் கலைஞர்களான மார்லன் பிராண்டோ, சார்ல்டன் ஹெஸ்டன், ஜிம் கார்னர், ஜாக்லெமன், ஜோர்ச் சாண்ட்லர், வால்டர் பிஜ்ஜியன், இந்திய இசைக்குயில் லதாமங்கேஷ்கர் (சிவாஜி அவர்களின் உடன்பிறவா சகோதரி) உசா மங்கேஸ்கர், பம்பாய் பட உலகில் ஜாம்பவான்களான அசோக்குமார், பிரித்விராஜ், ராஜ்கபூர், திலீப்குமார், பாரத நாட்டின் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத், வீவி கிரி, ஆர் வெங்கட்ராமன் ஆகிய பெரிய பெரிய தலைவர்களையும் - அறிஞர்களையும், கல்வியில் சிறந்தோர்களையும் மெய் தீண்டி மெய்சிலிர்த்த அனுபவத்தை அவரது பிறந்தநாளில் எழுதி மகிழ விரும்புகிறேன்!

"பராசக்தி" படத்தைப் பத்துவயதாகவிருக்கும்போது பார்த்துப் பரவசம் அடைந்த நாளிலிருந்தே சிவாஜி ஐயாவிடத்து ஒரு மரியாதை கலந்த விருப்பம். இது வெறும் சினிமா கவர்ச்சியால் ஏற்பட்ட விருப்பு அல்ல! "ஆளும் வளரனும் அறிவும் வளரனும்" என நமது பட்டுக்கோட்டையார் பாடி வைத்தது போல பின்னாளில் அவரிடத்துள்ள ஞானத்தை கண்டறிந்து கலையுலகில் சிவாஜி ஐயா தான் மிக உயர்ந்த கலைஞர் என்ற முடிவுக்கு வந்தேன்.



எனது முடிவு சரியானது தான் என்பது போல் இயக்குனர் பாரதிராஜா சிவாஜி அவர்களுக்கு முதல் மரியாதை செலுத்திவிட்டு 1995 "பசும்பொன்" என்றொரு படத்தையும் சிவாஜியை வைத்து இயக்கி இருந்தார். நடிகர் திலகம் நடிக்கும் படங்களில் அவரை இயக்குபவர்கள் வசனம் எழுதுபவர்களும் சிவாஜி அவர்களிடத்துள்ள பெருமைகளைப் பாத்திரத் தன்மையோடு ஒட்டி பெருமை படுத்துவார்கள். அப்படியாக ஒரு காட்சி "பசும்பொன்" திரைப்படத்தில் இடம்பெறும் துரைராசு தேவர் என்ற பணக்கார பெரியவராக சிவாஜி வருவார். அவருடைய மகளாக ராதிகா நடித்திருப்பார். ராதிகாவின் முதல் கணவனின் மகன் தேவருக்கு பேரன். ஒரு காட்சியில் பேரன் சிவாஜியை பார்த்து "தாத்தா ஊரில் உள்ளவர்கள் உங்களை கண்டதும் எழுந்து நின்று வணங்குகிறார்களே! அவ்வளவுக்கு நீ பெரிய ஆளா என்று கேட்பான்" துரைராசு தேவர் (சிவாஜி) சிரித்துக்கொண்டு "அப்படித்தான் எல்லோரும் பேசிக்கிறாங்க..." என சாதாரணமாக பதிலுரைத்தார். இது வெறும் திரை உரையாடல் அல்ல. இது தான் உண்மை. அவ்வளவு பெருமையும் புகழும் வாய்க்கப்பெற்ற சிவாஜி ஐயா அவர்கள் 1978 பைலட் பிரேம்நாத் இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பான "பைலட் பிரேம்நாத்" படத்தில் நடிக்கக் கொழும்பு வந்திருந்தார். அச்சமயம் நான், ஒரு அரசு ஊழியருக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக வெள்ளவத்தையில் ஒரு நண்பர் வீட்டில் தங்கியிருந்தேன்.

ஒருநாள் அவர் சொன்னார் "உம்முடைய ஆள் வந்திருக்கிறார் போய் பாருமன்" நான் "ஆரை சொல்லுறீர்! "அவர்தான் உன்னுடைய ஆசான் சிவாஜி"! நான் ஆவலுடன், எங்கே? என கேட்க "அதோ தெரியுதே பிரைட்டன் ஹோட்டல் அங்கதான் தங்கியிருக்கிறார். படப்பிடிப்புக்கு முதல் காலையில் ஆட்கள் போய் அவரைப் பார்க்கலாம்" என்றார். அடுத்த நாள் காலை மிகவும் ஆனந்தமாக புறப்பட்டுச் சென்றேன். விடுதியை நெருங்கியதும் நெரிசலான கூட்டம் வீதியில் கூடி இருந்தது. என் மனதில் திடீரென ஒரு எண்ணம் தோன்றியது. நானோ சிவாஜியின் முதல் தர ரசிகன். நான் கூட்டத்தோடு கூட்டமாக நின்று சிவாஜிக்கு கையசைப்பதா! என்னை அவர் அடையாளம் காணும் அளவிற்கு நான் அறிமுகமில்லாதவன். அப்படி ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொண்டு இன்னொரு தடவை பார்த்துக் கொள்ளலாம், என மீண்டும் என் இடத்திற்கு திரும்பி விட்டேன். நண்பருக்கு என் முடிவை கூறினேன், அவர் அப்போது சிரித்தார். அந்த சிரிப்புக்கு பல அர்த்தம். அவர் இப்போது லாஸ் ஏஞ்சல்சில் வசிக்கிறார். அதே லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் சிவாஜி ஐயா என்னை அடையாளம் காண வைத்த நிகழ்வு சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின் அவரிடம் கூறினேன். அவர் வியப்பில் ஆழ்ந்து விட்டார்!. நான் அமெரிக்க நகரான லாஸ் ஏஞ்சல்ஸில் 1995 நடந்த பாராட்டு விழாவில் சிவாஜி ஐயாவை வாழ்த்தி கவிதை வாசிக்கும் நிகழ்வு பல ஆண்டுகளுக்கு முன் 1976 சென்னையில் நடந்த வேடிக்கையான நிகழ்வையும் உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் ஒரு தனியார் நர்சிங் ஹோமில் மருந்து கலவை யாளராக பணிபுரிந்து வந்தேன். அந்த நர்சிங் ஹோம் நிர்வாகம் தரும் ஊதியம் போதாத காரணத்தால் திரைகடலோடியும் திரவியம் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன். வெளிநாடு போகும் வாய்ப்பு வருமா என நிமித்திகன் (ஜோதிடர்) ஒருவரிடம் ஆலோசனை கேட்டேன். அவர் உமக்கு கடல் கடக்கும் பலன் இல்லை எனக்கூறினார். அதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக பலாலி டு திருச்சி விமானப் பயணம்(1976)ல் மேற்கொண்டேன். திருச்சியிலிருந்து சென்னை பட்டிணம் சுற்றிப் பார்ப்பதற்காக சென்றேன். சென்னையில் இலக்கம் 11 போக் ரோட்டில் உள்ள சிவாஜி ஐயா அவர்களின் "அன்னை இல்லம்" (இப்போது டாக்டர் செவாலியே சிவாஜி கணேசன் சாலை) சென்றேன். மெயின் கேட் வாசலில் அய்யனார் சாமியின் மீசையுடன் ஆஜானுபாகுவான ஒரு வாயில் காப்போன் இருந்தான். நான் அய்யாவை பார்க்க யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருக்கிறேன் என்றேன். எந்த முன்னறிவிப்போ, முகவரியோ, முகாந்திரமோ இன்றி சிவாஜி அவர்களை சந்திக்க முடியாது என்று தெரிந்தும் சரி முயற்சி செய்து பார்ப்போம், சென்னையில் தானே இருக்கிறேன் என அவரிடம் சென்றேன். வாயில் காப்போன் சொன்னா ஐயா இப்போது ஐயப்ப சாமிக்கு மாலை போட்டு இருக்கிறார் யாரையும் பார்ப்பதில்லை காலையில் ஷூட்டிங் போகும் போது இங்கிருந்து பார்க்கலாம் என்றான். "ஏய் சாமி! நான் அய்யாவை வீதியிலிருந்து பார்ப்பதற்காக விமானத்தில் வரவில்லை. இப்படி ஒருவர் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து போனார் என்று உன்னுடைய அய்யாவிடம் சொல்லு" என கொஞ்சம் வீராப்புடன் கூறிவிட்டு, என்னுடைய லாட்ஜிக்கே சென்றுவிட்டேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு சரியாக 20 ஆண்டுகளுக்குப்பின் அருமை நண்பர் அன்பு அறிவிப்பாளர் திரு பி எச் அப்துல் ஹமீத் அவர்கள் என்னை 1996ல் "அன்னை இல்லத்திற்கு" அழைத்துச் சென்றார். ஆச்சரியமான வரவேற்பு! ஏற்கனவே லாஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்ற பாராட்டு விழாவில் நான் வாசித்த பாராட்டு கவிதையை செவிமடுத்து இருந்த சிவாஜி ஐயாவின் அன்பு மனைவி திருமதி கமலா அம்மா "நம்ம அய்யாவை நன்னா புரிஞ்சு வச்சிக்கிட்டல்லவா கவிதை படிச்சீங்க, நம்ப சாந்தி தியேட்டர் கம்பெனில சாந்தி மாட்டி வைத்து இருப்போம் என்று முகமலர்ச்சியுடன் கூறி வரவேற்றார். இரண்டு நாட்கள் அன்னை இல்லத்தின் விருந்தாளியாக அழைக்கப்பட்டிருந்தேன் அந்த இரு நாட்களும் சிவாஜி ஐயா என்னிடம் காட்டிய பரிவும் பாசமும் சொல்லில் அடங்காது!



"சிவாஜி உன் கரங்களை தொட்டுவிட்டால் நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா!" என பாடத் தோன்றியது.

இந்த இரு நாட்களும் எங்கள் இருவருக்கும் இடையே நடந்த உரையாடல் மிகவும் சுவையானது இன்னொரு சமயம் இது பற்றி எழுதுவேன்! வாழ்க சிவாஜி புகழ்!

# முத்தமிழே இனி எங்கள் உரமாகும்!

உலகறியும் மொழிகளிலே தமிழ் மொழிபோல்
உயர்தனிச் செம்மொழி வேறில்லை !
இலக்கண இலக்கிய வரலாற்றோடு
இலங்கும் தமிழக்கிணை ஏதுமில்லை !

பொதிகை மலைச் சாரலாய்ப் புவிமீது
பார்போற்ற வாழும் மொழித் தமிழாகும் !
வாழ்வியலாம் வள்ளுவத்தில் நிலைபெற்று
வான் போற்றும் தமிழெங்கள் அமுதாகும் !

சங்கம் வளர்த்த மாமதுரை வீதியெங்கும்
அங்கமாய்த் தமிழ்த்தூண்கள் அரணாகும் !
மூவேந்தர் புகழ் பாடிப் பாரெங்கும்
முத்தமிழே இனி எங்கள் உரமாகும் !

வரிவடிவத் தமிழின் தொன்மைக்குச் சான்றாகி
வைகையாற்றுத் தமிழர் நாகரிகமாய்க் கீழடி !
உலகின் முதல் மொழித் தமிழென்று
உணர்த்துகின்ற அகழாய்வே எங்கள் தாய்மடி !

ஈராயிரம் ஆண்டுக்கு முற்பட்ட திருக்குறளே
இணையிலா உலகப் பொதுமறை !
ஓராயிரம் ஆண்டுப் பழமை உரைக்கின்ற
ஆத்திச்சூடி நாமறிந்தத் திருமறை !

பிராமி வடிவம் தமிழக்கு மூலமென
மாங்குளத்துக் கல்வெட்டு விளக்கியது !
இன்றளவும் ஒலிவடிவம் வரிவடிவம் காத்து
குன்றமென நின்றே தமிழ் துலங்கியது !

தமிழைப்போல் இனிதான மொழி வேறில்லையென
தரணிக்கு எடுத்துரைத்தான் நம் மகாகவி !
ஈழத்து தமிழர் வரலாற்றை எடுத்துரைக்க
யாழ்ப்பாண நாலகமே சான்றளிக்கும் !

உலகெங்கும் கால்பத்தித்த தமிழரின் மேன்மை
பலகாலம் பறைசாற்றும் தமிழின் மாண்பை !
தன்னிலிருந்து மலர்ந்த சொல் தம்இழ்
தரணி ஆளும் தமிழக்கு மகுடமாகும் !

*....கா.ந.கல்யாணசுந்தரம்*

# ஈழத்துத் திருக்கோவில்கள் 915



**மேலதிக தகவல்களுக்கு:**
**திருமதி.வசந்தா நடராசன் B.A.,**
(416) 332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் சோமநாதலிங்கேஸ்வரர் சோமகலாநாயகி கோயில்

### - மட்டக்களப்பு -

மனிதநேய நல்லெண்ணங்களைக் கருத்தில்கொண்டு மனிதமேம்பாட்டிற்கு அரும்பாடுபட்ட ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகள், நாடுவிட்டு நாடு வந்து உழைத்துள்ளார். மக்கள் வாழ்வு நலம்பெற ஆலயங்களை தான் வாழ்ந்த சூழலில் அமைத்து அரும்பணியாற்றினார். இவ்வாறு சுவாமிகளால் அமைக்கப்பட்ட செட்டிபாளையம் ஆலயம் காலகதியில் பெருவளர்ச்சி கண்டது.

1981 ஆம் ஆண்டு புதிய ஆலயம் கட்டி எழுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டு வைரவர் ஆலயம், நவக்கிரக ஆலயம், மணிக்கோபுரம் என்பனவும் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவுபெற்றது. இவ்வாலயத்தின் முகப்பு மண்டபத் தூண்கள் திராவிடக் கட்டடக்கலை அமைப்பு சார்ந்ததாக விளங்குவது சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தின் வளாச்சியில் அக்கறைகொண்டு பல்வேறுவழியில் பலரும் அரும்பாடுபட்டு உழைத்து வருகின்றனர். இந்தவகையில் அன்பர் ஒருவரின் உபயமாக ஐம்பொன்னாலான எழந்தருளி விக்கிரகம் இவ்வாலயத்திலே நிறுவப்பட்டுள்ளது.

செட்டிபாளையம் சிவன்கோயிலில் தைப்பிறப்பு முதல் தைப்பூசம், மாசிமகம், மகாசிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு, சித்ராபௌர்ணமியில் சித்திரைக்கதை, ஆனி உத்தரம், ஆடிஅமாவாசை, நவராத்திரி, கேதாரகௌரிவிரதம், கார்த்திகை விளக்கீடு, சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம், திருவெம்பாவை, திருவாதிரை முதலியவை முக்கியமாகக் கொண்டாடப்பட்டன.

மகா சிவராத்திரி, நவராத்திரி, கேதாரகௌரி முடிவு, திருவாதிரை அகிய நாட்களில் சுவாமி தீர்த்தமாடும் நிகழ்வு இடம்பெறும். திருவாதிரையை திருவிழாவுக்குரிய திருநாளாகக் கொண்டு மகாதீர்த்தம் இடம்பெறும். சுவாமி எழுந்தருள அக்காலப்பகுதியில் வாகனங்கள் காணப்படவில்லை. ஆயினும் பூக்களால் அமைக்கப்பட்டு கோயில் அமைப்பிலே கட்டப்பட்ட பூந்தொட்டில் எனப்படும் சிறிய தேரில் சுவாமி எழுந்தருளி கடலிலே தீர்த்தமாடுவார். இவற்றோடு மகாசிவராத்திரி, நவராத்திரி, கேதாரகௌரிவிரதம், திருவெம்பாவை முடிவு ஆகிய திருநாட்களில் சுவாமி எழுந்தருளி ஊர்வலமாகச் சென்று கடலிலே தீர்த்தமாடும் விழா சிறப்பாக நடைபெறும்.

நிர்வாகசயையின் பணி, மக்களின் தொண்டு இவற்றோடு ஒரு ஆலயத்தின் வளர்ச்சி, ஆலயத்திலே தன்னலமற்ற பணிபுரியும் சிவாச்சாரியார்களால் மேலும் சிறப்புப் பெறுகின்றது. இந்தவகையில் இவ்வாலயத்தின் பிரதம சிவாச்சாரியாராகிய சிவஸ்ரீ சுந்தரம்பிள்ளைக் குருக்களின் தன்னலமற்ற சேவையினால் இவ்வாலயம், பல்வேறு வழிகளில் சிறந்து விளங்குகின்றது.

இவ்வாலயத்திலே காலை, உச்சி, மாலை ஆகிய மூன்றுகாலப்பூசை இடம்பெற்றுள்ளது. இவற்றை செட்டிபாளையத்திலுள்ள சகல மக்களும் சாதிபேதமற்ற முறையில் வரிசைக்கிரமமாக ஏற்று நடத்தி வந்துள்ளனர். வருடம் முழுவதற்கும் செட்டிபாளையத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொருநாள் பூசைக்குப் பொறுப்பேற்று நடத்தியுள்ளனர். பூசைக்குரிய பொருட்களை பூசையை நடத்தும் குடும்பமே கொடுக்கவேண்டும். அத்தோடு பூசகரின் ஒருநாள் சாப்பாட்டுக்குரிய அரிசி, காய்கறி வகைகளையும் கொடுப்பதோடு, பூசகரின் ஒருநாள் சம்பளப்பணமாக ரூபா பதினைந்தும் கொடுக்க வேண்டும். தற்காலத்திலே இவற்றிலே மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாலயம் சிறப்பாக நடைபெற திருவருள் சங்க உறுப்பினர்கள் ஆலய பரிபாலனத்தை நிர்வகித்து வருகின்றனர். இச்சங்கத்தின் தலைவர், செயலாளர், தனாதிகாரி ஆகியோருடன், நிருவாகசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுச்சபையும் சோந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, சுவாமிஜீ வகுத்தவழியில் தன்னலமற்றநிலையில், ஆலய வளாச்சியைமட்டும் கருத்தில்கொண்டு அரும்பணியாற்றி வருகின்றனர். ஏங்கிருந்தோ வந்து மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதைக் கருத்தில் கொண்டு அருந்தொண்டாற்றிய சுவாமிஜீ அவர்களின் நினைவாக, நினைவாச்சிரமம் அமைக்கும் பணியில் திருவருள் சங்கத்தினர் பணியாற்றி வருகின்றனர்.

இந்து தர்மத்தில் மாதா, பிதா, குரு, தெய்வம் என்போர் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். எழுத்தறிவித்தவர்கள் மட்டுமல்ல, மனிதநேயத்தோடு வழிகாட்டிய பெரியோரும் குருவாக மக்களால் ஏற்றிப் போற்றப்படுகின்றனர். இந்நிலையை எய்திய ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகள், மக்கள் திருவருளைப் பெற்றுய்ய ஏற்ற குருவாக விளங்கியுள்ளார். ஸ்ரீலஸ்ரீ சோமேஸ்வரானந்தகிரி சுவாமிகள் வகுத்த நெறி-முறையில் செட்டிபாளைய மக்கள் செயற்பட்டு, இன்றுவரை இவ்வாலயம் சிறப்பாக நடைபெற உதவி வருகின்றனர்.

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றானை யென் சொல்லி வாழ்த்துவனே'.

*தொடரும்...*

## உரும்பிராய் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கத்தின் 27வது ஆண்டு பொது கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும்

காலம் : 03 - அக்டோபர் 2020
நேரம் : 4:00 - 8:00pm
இடம் : தமிழர் செந்தாமரை மண்டபம்
# 2 – 1160 Tapscott Road Scarborough ON M1X 1E9

முக்கிய குறிப்பு : கொரோனா வைரஸ் காரணமாக அனைவரும் தயவு செய்து சுகாதாரத்தைப் பின்பற்றுங்கள். கட்டாயமாக முகமூடியை அணியவும். உங்களிற்கும் அடுத்தவருக்கும் இடையில் இடைவெளியை 2m /6ft பேணவும்.
தொடர்புகளுக்கு: மதனா: (416) 720 8690 பாலச்சந்திரன் - (416) 720 1529:
urumpiraischoolsosa.ca@gmail.com

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS C R PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


STEELES
PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE
உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)


SKN
SKN FINANCIAL
www.sknfinancial.com
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்
$ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
$ புதிய மனைஸ்ன வாங்குவதில் பணச்சிக்கலா?
$ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
$ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
$ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்
முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது
உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com
SCARBOROUGH
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238
BRAMPTON
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# அன்பின் தொனி - 580

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன்**

என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன். நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமான தையும் பேசாமல் அமர்ந்திருந்தேன், ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது, என் இருதயம் எனக்குள்ளே அனல் கொண்டது, நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது, அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன். கர்த் தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர், என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாத துபோலிருக்கிறது, எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம். வேஷமாகவே மனுஷன் திரிகி றான், விருதாவாகவே சஞ்சலப்படுகிறான், ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறி யான். இப்போதும் ஆண் டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை. என் மீறுதல்கள் எல் லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும், மூடனுடைய நிந்தனைக்கு என்னை ஒப்புக்கொடாதேயும். நீரே இதைச் செய்தீர் என்று நான் என் வாயைத் திறவாமல் மவுனமாயிருந்தேன். என்னிலிருந்து உம்முடைய வாதையை எடுத் துப்போடும், உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்து போனேன். அக்கிரமத்தினிமித்தம் நீர் மனுஷனைக் கடிந்துகொண்டு தண்டிக்கிறபோது, அவன் வடிவைப் பொட்டரிப்பைப்போல் அழியப்பண்ணுகிறீர், நிச்சயமாக எந்த மனுஷனும் மாயையே. கர்த்தாவே, என் ஜெபத்தைக்கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும், என் கண்ணீருக்கு மவு-னமாயிராதேயும், என் பிதாக்களெல் லாரையும்போல நானும் உமக்குமுன்பாக அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன். நான் இனி இராமற்போகுமுன்னே, தேறுதலடையும்படி என்னிடத்தில் பொறுமையாயிரும்.

**- சங்கீதம் 39: 1-13**

**என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்**

கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன், அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கர மான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி என் அடிகளை உறுதிப்படுத்தி, நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார், அநேகர் அதைக் கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள். அகங்காரிகளையும் பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களையும் நோக்கா மல், கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான். என் தேவனாகிய கர்த்தாவே, நீர் எங்கள் நிமித்தஞ் செய்த உம்முடைய அதிசயங்களும் உம்முடைய யோ-சனைகளும் அநேகமாயிருக்கிறது, ஒருவரும் அவைகளை உமக்கு விவரித்துச் சொல்லிமுடியாது, நான் அவைகளைச் சொல்லி அறிவிக்கவேண்டுமானால் அவைகள் எண்ணிக்கைக்கு மேலா னவைகள். பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர், சர்வாங்க தகனபலியையும் பாவ நிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை. அப்பொழுது நான். இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழு தியிருக்கிறது, என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன், உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத் திற்குள் இருக்கிறது என்று சொன்னேன். மகா சபையிலே நீதியைப் பிரசங்கித்தேன், என் உதடுகளை மூடேன், கர்த்தா வே, நீர் அதை அறிவீர். உம்முடைய நீதியை நான் என் இருதயத்திற்குள் மறைத்துவைக்கவில்லை, உமது சத்தியத்தை யும் உமது இரட்சிப்பையும் சொல்லியிருக்கிறேன், உமது கிருபையையும் உமது உண்மையையும் மகா சபைக்கு அறிவியா தபடிக்கு நான் ஒளித்துவைக்கவில்லை. கர்த்தாவே நீர் உம்முடைய இரக்கங்களை எனக்குக்கிடையாமற் போகப்பண்ணா தேயும், உமது கிருபையும் உண்மையும் எப்பொழுதும் என்னைக் காக்கக்கடவது. எண் ணிக்கைக்கு அடங்காத தீமைகள் என்னைச் சூழ்ந்துகொண்டது, என் அக்கிரமங்கள் தொடர்ந்து பிடித்தது, நான் நிமிர்ந்து பார்க்கக் கூடாதிருக்கிறது, அவைகள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கிறது, என் இருதயம் சோர்ந்துபோகிறது. கர்த்தாவே, விடுவித்தருளும், கர்த்தாவே, எனக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும். என் பிராணனை அழிக்கத் தேடுகிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி, எனக்குத் தீங்குசெய்ய விரும்புகிறவர்கள் பின்னிட்டு இலச்சையடை வார்களாக. என்பேரில் ஆ ஆ! ஆ ஆ! என்று சொல் லுகிறவர்கள், தங்கள் வெட்கத்தின் பலனையடைந்து கைவிடப்படு வார்களாக. உம்மைத் தேடுகிற அனைவரும் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக, உம்முடைய இரட்சிப்பை விரும்புகிறவர்கள் கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று எப்பொழுதும் சொல்வார்களாக. நான் சிறுமையும் எளி மையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார், தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக் கிறீர், என் தேவனே, தாமதியாதேயும்.

**- சங்கீதம் 40: 1- 17**

**கர்த்தாவே, என்மேல் இரக்கமாயிரும்**

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான், தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனை உயிரோடே வைப்பார், பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான், அவன் சத்துருக்களின் இஷ்டத் திற்கு நீர் அவனை ஒப் புக்கொடீர். படுத்து வியாதியாய்க்கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார், வியாதியிலே அவனை மாற்றிப்போடுவீர். கர்த்தா வே, என்மேல் இரக்கமாயிரும், உமக்கு விரோத மாய்ப் பாவஞ்செய்தேன், என் ஆத்துமாவைக்குணமாக்கும். அவன் எப் பொழுது சாவான், அவன் பேர் எப்பொழுது அழியும்? என்று என் சத்துருக்கள் எனக்கு விரோதமாக சொல்லுகிறார்கள் ஒருவன் பார்க்கவந்தால் வஞ்சனை பேசுகிறான், அவன் தன் இருதயத்தில் அக்கிரமத்தைச் சேகரித்துக் கொண்டு, தூாற்று கிறான். என் பகைஞர் என்மேல் முணுமுணுத்து, பொல்லாங்கு நினைத்து, தீராவ-யாதி அவனைப் பிடித்துக் கொண்டது, படுக்கையிலிருக்கும் அவன் இனி எழுந்திருப்பதில்லை என்கிறார்கள். என் சிநேகிதனும், நான் நம்பினவனும், என் அப் பம் புசித்த மனுஷனும், தன் குதிகாலைத் தூாக்கினான். கர்த்தாவே, நீர் இரங்கி, நான் அவர்களுக்குச் சரிக்கட்ட என் னை எழுந்திருக்கப்பண்ணும். சத்துரு என்னை ஜெயங்கொள்ளாததால், நீர் என்மேல் பிரியமாயிருக்கிறீரென்று அறிவேன். என் உத்தமத்திலே என்னைத்தாங்கி, உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் சதாகாலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஆமென், ஆமென்.

**- சங்கீதம் 41: 1- 13**

*தொடரும்...*




# மரண அறிவித்தல்

மலர்வு: 20-08-1932

இறப்பு: 28-09-2020



**திருமதி. சற்குணம் நடராசா**

புங்குடுதீவு 11ம் வட்டாரம்

**யாழ். புங்குடுதீவு கிழக்கு 11ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும்,**
**கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட**
**திருமதி. சற்குணம் நடராசா அவர்கள்**
**28-09-2020 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்ற பேரின்பநாயகி (ஈஸ்வரி), செல்வநாயகி (கனடா), காலஞ்சென்ற திலகநாயகி, வள்ளிகாந்தன் (கனடா), கௌரிகாந்தன் (கனடா), காலஞ்சென்ற லக்ஷிமிகாந்தன், தெய்வநாயகி (கனடா-இலங்கை), ஸ்ரீகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (அதிபர்), விஸ்வலிங்கம், சண்முகலிங்கம், கார்த்திகேசு (அதிபர்), லெட்சுமிப்பிள்ளை (அம்மா), பரிமளம் (சின்னம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தன், மகாலிங்கசிவம் மற்றும் விஜயலதா, அம்பிகாதேவி, விக்கினேஸ்வரன், ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும்,

காலஞ்சென்றவர்களான் கந்தையா (அதிபர்), மனோன்மணி, பராசக்தி, விநாயகமூர்த்தி, கோபாலபிள்ளை (மகாலிங்கம்), கமலாம்பிகை, பரஞ்சோதி, சாராதாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

ஈசானந்தன் (தளபதி), பிரபாகரன், கோமகள், புஷ்பாசனி, மதுரா, இந்துஜா, ஷாலினி, காலஞ்சென்ற பாரதி, தாரணி, ஜனனி, வாகினி, நாமகள், திருமகள், மயூரன், துஷியந்தன், இந்துசன், காலஞ்சென்ற றஜீவன், பவித்ரா, திவ்வியா, தர்ஷன், சரண்யா, ஸ்ரீராம் ஆகியோரின் அன்புப் பேத்தியும்,

ரக்சன், யுவராஜ், யுகேஸ்வரன், எலிசா, அம்சனா, சங்கவி, ஜெசிகன், ஜெனிஷன், கதிரவன், வென்ரா, இவானா, நிதானா, ரோகீஷன், ஹர்சினி, டினிஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03-10-2020 சனிக்கிழமை மாலை 6:00 மணி தொடக்கம் 9:00 மணிவரையும், 04-10-2020 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணி தொடக்கம் 11:00 மணிவரையும் 8911 Woodbine Ave. இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home & Cremation Centre இல் பார்வைக்கு வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து காலை 11:00 மணி தொடக்கம் மாலை 12:00 மணிவரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று 12492 Woodbine Ave., Gormley, ON L0H 1G0 இல் அமைந்துள்ள Highland Hills Crematorium இல் தகனக்கிரியைக்காக எடுத்தச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**

வள்ளிகாந்தன் (மகன்): (647) 919-0937
செல்வநாயகி (மகள்): (416) 917-2395
கௌரிகாந்தன் (மகன்): (647) 825-8684
ஸ்ரீகாந்தன் (மகன்): (647) 261-2068
தெய்வநாயகி (மகள்): (647) 505-2978
கோமகள் (பேத்தி): 94770589164

Carefirst Family Health Team
Accepting New Patients



புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



Life Insurance
Don't think twice
Life Insurance
Critical Illness
Disability
Investments
Group Benefits
RRSP / RESP
iNFORCE LIFe Financial Services Inc.

RESP
Registered Education Saving Plans
40% - 20%
Goverment Grant
Plus additional
15-10% on us.
Start Saving Early

Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay:
416.704.8074

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

வீடு வாங்க விற்க
Vijay Muthumani
Sales Representative
HomeLife Today Realty Ltd., Brokerage*
*Independently Owned and Operated.
Off: 416-298-3200
Dir 647-963-0705

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் தமிழ் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
October 2020
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1278 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 2, 2020

# 'பைரவி' நுண்கலைக் கூட நிறுவனத்தினர் தொடர்ந்து 12நாட்கள் நடத்திய தியாகி திலீபன் நினைவான அஞ்சலி நிகழ்வுகள்







கடந்த சனிக்கிழமையன்று செப்டம்பர் மாதம் 26ம் திகதி உலகத் தமிழர்களின் வரலாற்றில் ஒரு முக்கியமான நாள் இது.

1987ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள ஒரு மைதானத்தில் ஐந்து கோரிக்கைகளை இந்திய அரசிடம் சமர்ப்பித்து அதற்காக தீர்வை இலங்கை அரசிடமிருந்து பெற்றுத் தரவேண்டும் என்று உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினார்.

கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாமலே, தமிழீழ விடுதலை இயக்கத்தின் சிரேஸ்ட போராளி திலீபன் செப்டம்பர் 26ம் திகதி உயர் நீத்தார். சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த திலீபன் தியாதி திலீபன் என தமிழ் மக்கள் அழுது புலம்பினார்கள். இந்திய அரசு வெட்கித் தலை குனிந்தது. அந்த அர்ப்பணிப்பான இழப்பின் 33வது ஆண்டு நிறைவு உலகெங்கும் அனுஸ்டிக்கப்பட்டது. கனடாவிலும் பல இடங்களில் உணர்வு பூர்வமாக பல நிகழ்வுகள்இடம்பெற்றன.

இந்த நினைவு நாளை முன்னிட்டு கனடாவில் இயங்கிவரும் 'பைரவி' நுண்கலைக் கூட நிறுவனத்தினர் கடந்த 15ம் திகதி தொடக்கம் 26ம் திகதி வரை தொடர்ந்து மாலை தொடக்கம் இரவு வரை தியாகி திலீபன் நினைவாக பல கலை நிகழ்வுகளை மேடையேற்றினர். கடந்த சனிக்கிழமையன்று கவிதைகள் சமர்ப்பித்தல் அஞ்சலி உரைகள் ஆகியனவும் இடம்பெற்றன. அன்று நடைபெற்ற இறுதி நாள் நிகழ்ச்சிகளில கனடா உதயன் பிரதம ஆசிரியரும் கலந்து கொண்டார். இந்த நினைவு நாள் நிகழ்ச்சிகள் 12 நாட்களும் கடனாவைத் தளமாகக் கொண்ட ஈழத்தாய் தொலைக் காட்சி நேரடி ஒளிபரப்பை வழங்கிய என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தியாகி திலீபனின் அர்ப்பணிப்பான மறைவு இடம்பெற்ற 33வது ஆண்டை முன்னிட்டு நாடு கடந்த தமிழீழ அரசின் அங்கத்தவர்கள் வழங்கிய உலர் உணவு







தியாகி திலீபன் அவர்களின் அர்ப்பணிப்பான மறைவு இடம்பெற்ற 33வது ஆண்டை முன்னிட்டு கடந்த சனிக்கிழமையன்று, நாடு கடந்த தமிழீழ அரசின் கனடா வாழ் அங்கத்தவர்கள் இணைந்து கனடாவின் மார்க்கம் நகரில் நீண்ட காலமாக இயங்கிவரும், Markham Food Bank என்னும் தர்ம ஸ்தாபனத்திற்கு 2000 இறாத்தல் உலர் உணவுப் பொருட்களை வழங்கினார்கள். இங்கு காணப்படும் படத்தில் நாடு கடந்த தமிழீழ அரசின் கனடா வாழ் அங்கத்தவர்களில் சிலரான திருவாளர்கள் நிமால் விநாயகமூர்த்தி, குமணன், சஞ்சீவன் ஆகியோர் மேற்படி Markham Food Bank இன் பிரதிநிதியிடம் உலர் உணவுப் பொருட்களை கையளிப்பதைக் காணலாம்.

## 'யுகம் வானொலி' புதிய கலையகம் MAJESTIC CITY உள்ளக வர்த்தக வளாகத்தில் திறந்து வைக்கப்பெற்றது





ரொரன்றோ நகரில் பல வருடங்களாக வானொலித் துறையில் தொடர்ச்சியாக காலூன்றி நிற்கும் கணபதி ரவீந்திரன் தலைமையில் இயங்கும் "யுகம் வானொலி" யின் புதிய கலையகம் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மதியம் ஸ்காபுறோ நகரில் Markham/ McNicoll இல் அமைந்துள்ள MAJESTIC CITY உள்ளக வர்த்தக வளாகத்தில் திறந்து வைக்கப்பெற்றது.

மேற்படி வர்த்தக வளாகத்தின் இரண்டாவது மாடியில் உள்ள" வல்வெட்டித்துறை வீதி" யில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த கலையகம் நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி கலையகத்தின் திறப்பு விழாவிற்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் லோகன் கணபதி, விஜேய் தணிகாசலம், மற்றும் அரிஸ் பாபிகியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு கலையகத்தை திறந்து வைத்தனர்.



நாடாவை வெட்டும் வைபவத்திற்கு முன்னர் சிறப்பு விருந்தினர்கள் புடைசூழ, கலைவேந்தன் கணபதி ரவீந்திரன், மலர் மாலை அணிவிக்கப் பெற்று MAJESTIC CITY வர்த்தக வளாகத்தின் வாசலிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பெற்றார். பின்னர் நடைபெற்ற விழாவில் பலர் உரையாற்றினார்கள். திருமதி ரூபி யோகதாசன் உட்பட பல நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் அனைவரும் மேடையில் பாராட்டப்பெற்றனர்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.